உழவரின்

# வளரும் வேளாண்மை

ஏப்ரல் 2020 ♦ மலர் 11 ♦ இதழ் 10

விரிவாக்கக் கல்வி இயக்கக வெளியீடு

ஆண்டு சந்தா ரூ. 250/- ஆயுள் சந்தா ரூ. 3500/- (15 ஆண்டுகள் மட்டும்) தனி இதழ் ரூ.25/-












## வேளாண் வணிக மேம்பாட்டு சிறப்பிதழ்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

கோயம்புத்தூர் – 641 003

# உழவரின் வளரும் வேளாண்மை


சிறப்பாசிரியர்

**பேராசிரியர் நீ. குமார்**

துணைவேந்தர்

உழுவோம் உழைப்போம் உயர்வோம்

ஆசிரியர் : முனைவர் **மு. ஜவஹர்லால்**
விரிவாக்கக் கல்வி இயக்குநர்

ஆசிரியர் குழு : முனைவர் **ரவி குமார் தியோடர்**
பேராசிரியர் மற்றும் தலைவர் (பயிற்சிப் பிரிவு)

திருமதி **இரா. சசிகலா**
உதவிப் பேராசிரியர் (இதழியல்)

முனைவர் **சி. ஆர். சின்னமுத்து**
பேராசிரியர் மற்றும் தலைவர் (உழவியல்)

முனைவர் **ஏ. சோமசுந்தரம்**
பேராசிரியர் மற்றும் தலைவர் (அங்கக இயற்கை வேளாண்மை)

முனைவர் **அ. பாலசுப்பிரமணியன்**
பேராசிரியர் மற்றும் தலைவர்
(மரம் வளர்ப்பு மற்றும் இயற்கை வள மேலாண்மை)

முனைவர் **சு. இரகுராமன்**
பேராசிரியர் (பூச்சியியல்)

முனைவர் **து. செல்வி**
பேராசிரியர் (மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல்)

முனைவர் **சே. நக்கீரன்**
பேராசிரியர் (பயிர் நோயியல்)

முனைவர் **அ. சுரேந்திரகுமார்**
பேராசிரியர் (பண்ணை இயந்திரவியல்)

முனைவர் **இரா. பிரேமாவதி**
இணைப் பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)

முனைவர் **ம. செந்தில்குமார்**
உதவிப் பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)

முனைவர் **கோ. செந்தில் குமார்**
உதவிப் பேராசிரியர் (உழவியல்)

முனைவர் **வெ. ஜெகதீஸ்வரி**
உதவிப் பேராசிரியர் (தோட்டக்கலை)

முனைவர் **சீ. ப. தாமரைச்செல்வி**
உதவிப் பேராசிரியர் (தோட்டக்கலை)

முனைவர் **ம. திருநாவுக்கரசு**
உதவிப் பேராசிரியர் (கால்நடை உற்பத்தி மேலாண்மை)



வெளியீடு
ஆசிரியர்
உழவரின் வளரும் வேளாண்மை
விரிவாக்கக் கல்வி இயக்ககம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003
தொலைபேசி : 0422-6611351



**உழவரின் வளரும் வேளாண்மை**
இதழில் வரும் கருத்துக்களுக்கு
அவற்றின் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாவர்

“வயிற்றுக்குச் சோறிட வேண்டும் – இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்
பயிற்றிப் பலகல்வி தந்து – இந்தப் பாரை உயர்த்திட வேண்டும்”
–பாரதி

# பொருளடக்கம்

மலர் – 11 ஏப்ரல் 2020 (பங்குனி – சித்திரை) இதழ் – 10


| | | |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் வணிக மேம்பாட்டு பணிகள் | 4 |
| 2 | உழவர் உற்புத்தியாளர் நிறுவனங்களின் மேலாண்மை | 10 |
| 3 | தொழில்நுட்ப வணிக காப்பகம் – ஓர் – பார்வை | 14 |
| 4 | மதுரை வேளாண் தொழில்முனைவோர் ஊக்குவிப்பு மையம் | 18 |
| 5 | திருச்சிராப்பள்ளி வேளாண் வணிக தொழில்முனைவோர் ஊக்குவிப்பு மையத்தின் சேவைகள் | 22 |
| 6 | கிள்ளிகுளம் வேளாண் வணிக தொழில்முனைவோர் ஊக்குவிப்பு மையம் | 24 |
| 7 | EDII – பெரியகுளம் தோட்டக்கலை தொழில்முனைவோர் மேம்பாட்டு மையம் | 27 |
| 8 | வனவேளாண்மை தொழில்முனைவோர் ஊக்குவிப்பு மையம் | 30 |
| 9 | பல்கலைக்கழக புதுமை புனைவுக் குழுமம் | 33 |
| 10 | திறன் மேம்பாட்டு மையம் – ஓர் பார்வை | 36 |
| 11 | தொழில்நுட்ப வேளாண் வணிக காப்பகம் (TBI) மூலம் தொழில் தொடங்கிய வெற்றியாளருடன் கலந்துரையாடல் | 39 |
| 12 | தனியார் விதை உற்புத்தியாளர் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப கூட்டமைப்பு | 42 |
| 13 | தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் முனைப்பு முதலீட்டுத் திட்டத்தின் செயல்பாடுகள் | 45 |
| 14 | வேளாண் பொருட்கள் ஏற்றுமதியாளர்களுக்கான பயிற்சி மற்றும் வழிகாட்டல் | 53 |

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் வணிக மேம்பாட்டு பணிகள்




**பேராசிரியர் நீ. குமார்**
துணைவேந்தர்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் – 641 003

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

– குறள் 972

எல்லா மக்களும் பிறப்பால் சமமே; அவரவர் செய்யும் தொழில் வேறுபாடுகளால் மட்டுமே பெருமை வரும் என்றார் வள்ளுவர். விவசாயத்தில் புதிய தொழில்நுட்பம் மற்றும் தொழில்முனைவோர்களை உருவாக்கும் நோக்கில் 2007 ம் ஆண்டு வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் நிறுவப்பட்டது. விவசாயம் சார்ந்த தொழில்முனைவோர்களுக்குத் தேவையான ஆலோசனைகளும், உதவிகளும் வழங்குவதே இந்த இயக்ககத்தின் தலையாய நோக்கமாகும்.

## வேளாண் வணிக காப்பகம்

(Agribusiness Incubator)

இன்றைய நிலையில் தொழில்முனைவோர் பலருக்கும் ஒரு சிறந்த வழிகாட்டியாய் இன்குபேட்டர் மையங்கள் திகழ்ந்து வருகின்றன. இன்குபேட்டர் என்பது தொழில்முனைய முற்படுவோருக்குத் தக்க ஆலோசனைகளை வழங்கி அவர்களின் புதிய எண்ணங்களைக் (Ideas) கொண்டு புதிய பொருட்களை உருவாக்கி, இதனை அதிக அளவில் உற்பத்தி செய்து சந்தைப்படுத்துவதற்காக ஒரு வணிக தொழில் நிறுவனத்தை துவங்கி, அதனை சிறப்பாக வெற்றி பெற வழிவகை செய்கிறது.

தொழில்முனைவோர்கள் வேளாண் வணிக காப்பகங்கள் மூலமாக

மிகச்சிறந்த தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு வழங்கி வருகின்றனர் என்றால் அது மிகையாகாது. உதாரணத்திற்கு, விவசாய வேலையாட்கள் பற்றாக்குறை என்பது நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அதிலும், தென்னை மரம் ஏறும் ஆட்கள் பற்றாக்குறை பெரும்பாலான இடங்களில் நிலவி வருகிறது. இந்த பிரச்சனைக்கு தீர்வு காணும் வகையில் தென்னை மரம் ஏறுவதற்கு அனுபவத்தை கொண்டு இயந்திர கருவியை உருவாக்க முன்வருபவர்கள் வரவேற்கப்படுகிறார்கள். அவர்களின் கருத்துக்களை தெளிவாக வல்லுநர் குழுவிடம் தெரிவிக்க வேண்டும். வல்லுநர் குழு அத்திட்டத்தின் சாத்தியக்கூற்றை பரிசீலித்து உரிய பரிந்துரைகளை வழங்கும். பரிந்துரை செய்யப்பட்ட கருத்துக்களை முன்மொழிந்த நபர்களுக்கு வேளாண் விஞ்ஞானிகளின் உதவியுடன் தக்க ஆலோசனைகள் வழங்கப்பட்டு கருவி உருவாக்கப்படும். இக்கருவியை பல்வேறு பரிசோதனைகளுக்கு உட்படுத்தி அதனை சிறந்த செயல்திறன் மிக்க கருவியாக மேம்படுத்தப்படும். பின்னர், ஒரு தொழில் நிறுவனம் துவங்கி, இந்த உன்னத கருவியை அதிக அளவில் உற்பத்தி செய்து உழவர்கள் பயன்பெறும் வண்ணம் சந்தைப் படுத்தப்படும். எனவே, கிராமத்தில் உள்ள இளைஞர்கள், உழவர்கள், பட்டதாரிகள், பொறியியல் வல்லுநர்கள் யாராக இருந்தாலும் அனுபவ ரீதியாக தங்களுக்கு தோன்றும் புதிய எண்ணங்களுக்கு இதே அணுகு முறையை கடைப்பிடித்து, புதிய கண்டுப்பிடிப்புகள் செய்து, வெற்றி பெறுவதோடு வேளாண் தொழில் சார்ந்து உள்ளவர்களுக்கு சிறப்பாக பணியாற்றலாம்.

இதுபோன்ற மையங்கள் மதுரை, திருச்சி, கிள்ளிகுளம் (தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்தது. திருநெல்வேலியிலிருந்து சுமார் 20 கி. மீ.) மற்றும் கோயம்புத்தூரில் உள்ள வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களில் அமைந்துள்ளன. மேலும், மேட்டுப்பாளையத்திலுள்ள வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பெரியகுளத்திலுள்ள தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திலும் வேளாண் வணிக காப்பகங்கள் இயங்கி வருகின்றன. மதுரையில் செயல்படும் காப்பகம் நபார்டு வங்கியின் உதவியுடனும், திருச்சி, கிள்ளிகுளம், மேட்டுப்பாளையம் மற்றும் பெரியகுளத்தில் இயங்கும் காப்பகங்கள் சென்னையிலுள்ள தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் நிதி உதவியுடன் செயல்படுகின்றன.

ஆகவே, வேளாண்மையில் அனுபவ ரீதியாக தொழில்நுட்பம் மற்றும் கருவிகளை உருவாக்க நினைக்கும் அனைவரும் வேளாண் வணிக காப்பகங்களை அணுகலாம்.

## வேளாண் தொழில்நுட்பத்தை வணிகமயமாக்குதல்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சிகளின் மூலம் தொழில்நுட்பங்கள், இயந்திரங்கள், பயிர் ஒட்டு இரகங்கள் போன்றவை கண்டறியப்படுகின்றன. இவற்றை பல்கலைக்கழகத்தால் பெருமளவில் உற்பத்தி செய்ய இயலாததால் தனியார் நிறுவனத்திற்கு பிரத்தியேகமற்ற தொழில்நுட்ப உரிமம் வழங்கப்படுகிறது. தொழில்நுட்ப உரிமத்திற்கான தொகையும், விற்பனையில் ராயல்டியும் (Royalty) பல்கலைக் கழகத்திற்கு வழங்கப்படும். இவ்வாறு, ஜூன் 2019 வரையில் 26 தொழில் நுட்பங்களுக்காக 37 நிறுவனங்களுக்கு இப்பல்கலைக்கழகத்தால் உரிமங்கள் தரப்பட்டுள்ளது.

மேலும், அதிக விளைச்சல் தரும் ஒட்டு இரகங்கள் பொது மற்றும் தனியார் விதை உற்பத்தி நிறுவனங்களுடன் இணைந்து சந்தைப்படுத்தப்படுகின்றன. இதன் மூலமாக, நெல், மக்காச்சோளம் மற்றும் வெண்டைக்காய் போன்றவற்றில் ஒட்டு இரகங்கள் விவசாயிகளுக்கு கொண்டு சேர்க்கப்பட்டுள்ளன. மேலும், மலைவேம்பு (MTP1) பத்து நிறுவனங்களுக்கும், சவுக்கு (MTP2) ஒரு நிறுவனத்திற்கும் வழங்கப்பட்டுள்ளன. இதுபோன்று, பல பயிர்களின் ஒட்டு இரகங்கள் தனியார் நிறுவனங்களின் மூலம் விவசாயிகளை சென்றடைய பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## மாணவர் தொழில்முனைவோர் மையம்

மாணவர்களை தொழில் முனைவோர்களாக்க தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் ஊக்கமும் ஆக்கமும் வழங்கப் படுவதுடன் கற்பதற்கு உகந்த சூழலை உருவாக்கி திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு கல்லூரியிலும் மன்றம் ஆரம்பிக்கப்பட்டு படிக்கும் காலத்திலேயே மாணவர்களுக்கு தொழில் துவங்குவதற்கும், அதனை நிர்வகிக்கும் திறனை வளர்க்கவும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

## வேளாண் பொருட்கள் மற்றும் இடுபொருட்கள் வணிகம்

இத்திட்டமானது 2003 ல் துவங்கப்பட்டு இப்பல்கலைக்கழகத்தின் கல்லூரிகளிலும், ஆராய்ச்சி நிலையங் களிலும் செயல்படுத்தப்படுகின்றன. அவற்றிற்கு ஆரம்பகால நிதி இப்பல்கலைக்கழகம் மூலம் கொடுக்கப்பட்டு உற்பத்தி மையங்கள் அமைக்கவும், பொருட்களை ஆய்வு செய்யவும், விற்பனை செய்யவும் வழிவகை செய்யப்படுகிறது. இதன் மூலம், டிரைக்கோடெர்மா விரிடி

போன்ற உயிர் உரங்கள் மற்றும் பிற இடுபொருட்கள் தயாரிக்கப்பட்டு விவசாயிகளின் பயன்பாட்டுக்கு விற்கப்படுகின்றன. வருமானம் ஈட்ட ஆரம்பித்தவுடன் ஆரம்பகாலத்தில் தரப்பட்ட நிதி மீண்டும் பெற்றுக் கொள்ளப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2018 – 2019 ல் 165 தரமான இடுபொருட்கள் மற்றும் சேவைகள் விவசாயிகள், நுகர்வோர் மற்றும் வேளாண் வணிக நிறுவனங்களுக்கு தரப்பட்டுள்ளன. இத்திட்டங்கள் மூலம் ரூ. 700 இலட்சம் ஆண்டு வருமானமாக கிடைக்கப் பெற்றுள்ளது. மேலும், இத்திட்டத்தின் மூலம் விவசாயிகள் மற்றும் மாணவர்களுக்கு தொழில்முனைவோராகுவதற்கு தகுந்த பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

## ஆலோசனை மற்றும் சேவை

வேளாண்மை சம்மந்தப்பட்ட ஆலோசனைகளும், சேவைகளும் அனைத்து தொழில்முனைவோர்களுக்கும், நிறுவனங்களுக்கும் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் மூலம் வழங்கப் படுகின்றன. அவற்றில் முக்கியமாக பூச்சி மேலாண்மை, பருவகால நிலை அறிவிப்பு, உயிர்ம கட்டுப்பாட்டு காரணிகள் ஆகியவற்றில் ஆலோசனை மற்றும் சேவைகள் குறிப்பிடத்தக்கது. கடந்த ஆறு வருடங்களுக்குள் எட்டு ஆலொசனைத் திட்டங்கள் வெற்றிகரமாக முடிக்கப் பெற்றுள்ளன.

## சான்றிதழ் பாடத்திட்டங்கள்

இத்திட்டம் திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்ககத்தின் மூலமாக அளிக்கப்படுகிறது.

## வேளாண் வணிகத் திட்டம் உருவாக்குதல்

பயனாளிகள் : கிராமப்புற இளைஞர்கள், தொழில்முனைவோர்கள், விவசாயிகள் மற்றும் வேளாண் மாணவர் அல்லாதோர்.

பாடத்திட்டம் : வேளாண் வணிக வாய்ப்புகள், பொருட்களை மேம்படுத்தி அதற்கான சந்தைப்படுத்தும் வழிமுறைகள், நிதி கையாளுதல் மற்றும் வேளாண் வணிக திட்டம் வரைவது.

## உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் மேலாண்மை

பயனாளிகள்: உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரிகள், இயக்குநர்கள், மாணவர்கள் மற்றும் உழவர்கள்.

பாடத்திட்டம்: நோக்கம் மற்றும் எதிர்காலத் திட்டம் வகுப்பது, தரவு சம்பந்தப்பட்ட மேலாண்மை மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்றார்போல் திட்டம் வகுப்பது, சந்தை மேலாண்மை மற்றும் திட்டங்கள் தீட்டி அதனை செயல்படுத்துவது.

## தென்னை விவசாயிகள் தொழில்முனைவோர்களுக்கு மேம்பாட்டு பயிற்சி

நான்கு தென்னை சாகுபடி உற்பத்தியாளர் நிறுவனங்களின் உறுப்பினர்களுக்கு (ஒரு நிறுவனத்திலிருந்து 20 விவசாயிகள்) ஐந்து நாள் பயிற்சி வழங்கப்பட்டது. இப்பயிற்சியில் தேங்காய் உற்பத்தியை எவ்வாறு அதிகப்படுத்துவது, அங்கக முறையில் சாகுபடி மற்றும் சான்றிதழ் பெறும்முறை, மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பது மற்றும் நீரா உற்பத்தி மையம் அமைக்கும் வழிமுறைகள் என தென்னை பற்றிய அனைத்து நுட்பங்களையும் விவசாயிகளுக்கு இப்பயிற்சியின் மூலம் அளிக்கப்பட்டு தென்னையில் தொழில்முனைவோர் என்னும் நிலைக்கு செல்ல வழிவகை செய்யப்பட்டது.

தொழில்முனைவோர்களுக்கு பல்வேறு ஆலோசனைகளை வழங்கி, விவசாயிகளுக்குத் தேவையான உதவிகளை செய்து, விவசாயிகள் ஒன்றுபட்டு கூட்டமைப்பாக உருவெடுக்கும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு வித்திடுவதுடன், தொழில்முனைவோரின் வளர்ச்சிக்கும் வழிகாட்டியாய் இருந்து வருகிறது இப்பல்கலைக்கழக வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககம்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்
### நிறுவன மேம்பாட்டுத் திட்டம் ( TNAU - Institutional Development Plan)



புதுதில்லியிலுள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தில் (ICAR) செயல்பட்டு வரும் தேசிய வேளாண்மை உயர்கல்வி திட்டதின் கீழ் (NAHEP) கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் நிறுவன மேம்பாட்டு திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கி ரூபாய் 24.86 கோடி நிதி அளித்துள்ளது. மேலும், இத்திட்டத்திற்கு தமிழக அரசு ரூபாய் 5 கோடி நிதியுதவி வழங்கியுள்ளது. இத்திட்டம் மாணவர் கல்வி கற்றல் முறையை மேம்படுத்தவும், வேளாண் வணிகத்தை நிர்வகிப்பதற்கு தலைவர்களை உருவாக்கி வேலை தேடுபவர்களைக் காட்டிலும் வேலை வழங்கும் தொழில் முனைவோராக மாற்றுவதற்கும், பல்கலைக்கழகத்தின் சேவைத்தரத்தையும், நிர்வாகத்தையும் மேம்படுத்த கல்வி மேலாண்மையில் சீர்திருத்தங்கள் செய்வதையும் முக்கிய நோக்கங்களாக கொண்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் நவீனமயமாக்கப்பட்ட வகுப்பறைகள்

(Smart Class Room), மொழி கற்றல் பயிற்சி கூடங்கள் (Language Lab), பெரிய தரவு பகுப்பாய்வுக் கூடம் (Big Data Analysis Lab), இ-விரிவாக்கக் கூடம், (e - Extension Lab), அறிவுசார்ந்த துல்லிய வேளாண்மை



பயிற்சி கூடங்களும் நிறுவப்படும். உள் நாடு மற்றும் வெளிநாடுகளில் இயங்கி வரும் தரம் வாய்ந்த கல்வி நிறுவனங்களில் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் செயல் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்படும். பல்கலைக்கழக முன்னாள் மாணவர்கள் தற்போது பயின்று வரும் மாணவர்களுக்கு வழிகாட்டிகளாக இயங்க கட்டமைப்புகள் ஏற்படுத்தப்படும். கல்வி வளாகம் பசுமையாக்குதல், சுற்றுப்புறச்சூழலை பாதுகாத்தல், சமுதாய கோட்பாடுகளை கடைப்பிடித்தல் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து செயல்படுத்தப்படும்.

## வேளாண் தொழில் சிந்தனைத் தொடர் போட்டி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககம் மாணவர்களை கண்டுபிடிப்பாளர்களாகவும், படைப்பாளிகளாகவும் மாற்றுவதற்கு சிந்தனைத் தொடர் போட்டி போன்ற நிகழ்ச்சிகளை நடத்துகின்றது. மாணவர்களிடையே சுயதொழில் துவங்குவது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதே சிந்தனைத் தொடர் போட்டியின் மிக முக்கிய நோக்கமாகும். இதன் மூலம் மாணவர்கள் பிற்காலத்தில் வேலைதேடும் நிலையிலிருந்து பலருக்கு வேலை அளிக்கும் தொழில் முனைவோர்களாக உருவாவதற்கான விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். இந்நிகழ்ச்சி இரண்டு நிலைகளாக நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியின் முதல் நிலை போட்டியானது குடுமியான்மலையிலுள்ள வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மேட்டுப்பாளையத்திலுள்ள, வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கிள்ளிகுளத்திலுள்ள வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்றது. அன்று நடைபெற்ற சிந்தனைத் தொடர் போட்டியின் முதல்நிலையில் புதுமை மற்றும் தொழில்நுட்ப ரீதியாக ஏற்றுக் கொள்ளக்கூடிய ஐந்து சிறந்த சிந்தனைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

முதலாம் நிலை போட்டிகளின் மூலமாக தெரிவு செய்யப்பட 27 அணிகள், இரண்டாம் நிலை போட்டிக்கு அழைக்கப்பட்டனர். இதிலிருந்து சிறந்த மூன்று சிந்தனைகளை தேர்ந்தெடுத்து பரிசுகள் வழங்கப்பட்டன. மேலும், 27 அணிகளின் சிந்தனைகளை வணிகமாக்குவதற்கு தேவையான சேவைகளை பெறுவதற்கு வேளாண் தொழில்முனைவோர் மேம்பாட்டு மையத்துடன் இணைக்கப்பட்டனர். இது போன்ற போட்டிகள் கிராமப்புற இளைஞர்கள் மற்றும் உழவர்களுக்காக 2020 - 21 ம் ஆண்டு முதல் நடத்தப்படும்.

# உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் மேலாண்மை

முனைவர் சே. தே. சிவகுமார்[1], முனைவர் நா. வெங்கடேச பழனிச்சாமி[2]
முனைவர் ச. செல்வம்[3]

1. வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் – 641 003
2. வேளாண் ஊரக மேலாண்மை துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் – 641 003
3. சமூக அறிவியல் துறை, அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருச்சி – 620 027
தொலைபேசி : 0422 – 6611310

உழவர்கள் ஒன்றாக செயல்பட்டு தங்களின் வருவாயை பெருக்கிக் கொள்வதற்காக உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தை அமைத்துக் கொள்ள அரசு வழிமுறைகளை இயற்றி நிதி உதவியையும் வழங்குகின்றது. இதனடிப்படையில் ஐநூறுக்கும் மேற்பட்ட உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் தமிழகத்தில் துவங்கப்பட்டுள்ளன. இந்த உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் ஒரு தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக (Limited Liability) செயல்படுகின்றது. இந்த நிறுவனங்களில் உழவர்களே இயக்குநர்களாக உள்ளனர். மேலும், இந்த நிறுவனத்தை நிர்வகிக்க முதன்மை செயல் அலுவலர் பணியமர்த்தப்படுகின்றனர்.

சுமார் ஆயிரம் உறுப்பினர்கள் கொண்ட உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் சிறப்பாக செயல்பட வேண்டுமானால் அனைத்து உறுப்பினர்களையும் ஒருங்கிணைத்து அதற்கேற்ப திட்டங்கள் வகுக்க வேண்டும். அதிக எண்ணிக்கை உள்ள உறுப்பினர்களை சீரிய முறையில் வழி நடத்தவும், திட்டங்களை செயல் படுத்தவும் அவர்களை 20 - 50 நபர்கள் கொண்ட சிறு குழுக்களாக அமைக்க வேண்டும். உறுப்பினர்களிடையேயும், குழுக்களிடையேயும் தகவல் பறிமாற்றத்தையும், நம்பிக்கையையும் ஏற்படுத்துவதற்கான பணிகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், பிற அரசு நிறுவனங்கள், வங்கிகள், கூட்டமைப்புகள் ஆகியவற்றுடன் வெளிவட்டார தொடர்பை ஏற்படுத்தி அதன் மூலம் தங்கள் நிறுவனத்தின் வளர்ச்சிக்கான திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்த வேண்டும்.

உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் சந்தை சார்ந்த வேளாண்மையை (Market Oriented Agriculture) கூட்டுப்பண்ணைய முறையின் மூலம் செயல்படுத்தி, அதிக அளவு உற்பத்தியினால் ஏற்படும் நன்மைகளைப் பெற்று அறுவடை பின்

செய் நேர்த்தி (Post Harvest Management), மதிப்புக்கூட்டுதல் (Value Addition), சங்கிலித் தொடர் மேலாண்மை (Supply Chain Management) போன்ற மேலாண்மை முறைகளையும் தொடர்ச்சியாக கடைப்பிடித்தால் வெற்றி வாய்ப்பு அதிகமாகும். எனவே, இக்கட்டுரையில் உழவர் உற்பத்தியாளர் நிறுவன மேலாண்மை முறைகள் பற்றி காண்போம்.





## சந்தை சார்ந்த வேளாண்மை

உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் சந்தை சார்ந்த வேளாண்மையைக் கடைப்பிடிக்க வேண்டும். சந்தை சார்ந்த வேளாண்மை என்பது நுகர்வோர் விரும்பும் பொருட்களை உற்பத்தி செய்து நுகர்வோர் விரும்பும் வண்ணம் சிப்பமிட்டு அவர்களை சென்றடைய செய்வதே சந்தை வேளாண்மை. நுகர்வோர் விரும்பும் பொருட்களை உற்பத்தி செய்தால் அதனை விற்கும்போது சிரமம் இருக்காது. நுகர்வோர் விருப்பம் என்பது, பொருட்களின் தன்மை, நிறம், பருமன், தரம், விலை, சுவை, விற்பனை முறை மற்றும் பணம் செலுத்தும் முறை ஆகிய அனைத்தும் உள்ளடங்கியதாகும். தனி ஒரு விவசாயியாக இந்த முறையை கடைப்பிடிப்பதில் சவால்கள் அதிகம். ஆனால், கூட்டுமுயற்சியில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் இதனை செய்ய முடியும். சந்தை சார்ந்த வேளாண்மையைக் கடைப்பிடிக்க அதிக அளவில் சந்தை சார்ந்த தகவல்களை சேகரித்து ஆய்வு செய்ய வேண்டும். நமது ஊர் சந்தையில் ஆரம்பித்து, மாவட்டம், மாநிலம், பிற நாடுகள் என பல்வேறு சந்தை பொருட்களின் உற்பத்தி முறை, சந்தைக்கு விற்பனைக்கு வரும் காலம் மற்றும் அதன் விலை, பதன் செய்யப்பட்ட பொருட்கள் என பல தகவல்களை சேகரித்து ஆய்வு செய்து எந்த பொருளை நாம் உற்பத்தி செய்து விற்பனை செய்தால் அதிக இலாபம் தொடர்ந்து கிடைக்கும் என கண்டறிந்து

அதனை உறுப்பினர்கள் சாகுபடி செய்ய திட்டம் வகுக்க வேண்டும்.

## வணிக சுற்றுச்சூழல் ஆய்வு மற்றும் வணிக உத்தி

வணிக நிறுவனங்கள் அந்தந்தக் காலகட்டத்திலுள்ள வணிக சூழல் மற்றும் வருங்காலத்தில் ஏற்படவுள்ள சூழலுக்கும் ஏற்ப செயல்பட வேண்டும். எனவே, வணிக சூழல் பற்றி ஆய்வு செய்வது இன்றியமையாதது. வணிக சூழல் என்பது, நாட்டின் பொருளாதார நிலை, அரசியல் நிலைப்பாடு, சமுதாயக் கண்ணோட்டம், சமுதாய வளர்ச்சி மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவற்றை சார்ந்து உள்ளது. வணிக சூழல் பற்றி தெளிவான கருத்துக்கள் பெற்ற பின்னர், தொலைநோக்குத் திட்டம் மற்றும் குறுகிய காலத்திட்டம் தயாரிக்க வேண்டும்.

எந்த ஒரு நிறுவனமும் பல ஆண்டுகள் சிறப்பாக செயல்பட்டு மென்மேலும் வளரவேண்டும். இதனை நடைமுறைப்படுத்த நிறுவனத்திற்கென்று ஒரு நோக்கமும், (Mission) தொலைநோக்கு எண்ணமும் (Vision) வரையறுக்கப்பட வேண்டும். நிறுவனத்தின் இந்த சீரிய நோக்கங்களை அடைவதற்காக தொலைநோக்குத் திட்டம் வகுக்க வேண்டும். இந்தத் தொலைநோக்குத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு ஆண்டு தோறும் திட்டம் வகுக்க வேண்டும்.

ஆராய்ச்சித் திறன் மூலம் குறிப்பிட்ட சந்தையைத் தேர்வு செய்து அந்தச் சந்தையில் உள்ள நுகர்வோர் மனநிறைவு கொள்ளும் வண்ணம் தேவையான வேளாண் பொருட்களை உற்பத்தி செய்து அந்த பொருட்களை வழங்குவதற்குத் தேவையான தொழில்நுட்பம், இடுபொருள், தொழில் வழிமுறைகளைத் தீர்மானிப்பதே வேளாண் வணிக உத்தி.

பல்வேறு உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் உறுப்பினர்கள் பல வகையான பொருட்களை உற்பத்தி செய்தாலும், அந்நிறுவனம் அவற்றுள் மிக முக்கியமான மூன்று பயிர்கள் அல்லது வேளாண் சார்ந்த தொழில்களைத் (கால்நடை, தேனீ வளர்ப்பு, பட்டு பூச்சி வளர்ப்பு ஆகியன) தேர்வு செய்ய வேண்டும். பல பயிர்களில் கவனம் செலுத்தினால் வெற்றிபெற இயலாது. எனவே, அனைத்து உறுப்பினர்களும் பயன்பெறும் வகையில் மூன்று அல்லது நான்கு பயிர்கள் அல்லது வேளாண் தொழில்களை தேர்வு செய்ய வேண்டும். மூன்று பயிர்கள் அல்லது வேளாண் தொழில்களுக்கு வேளாண் வணிகத் திட்டத்தை முதன்மைச் செயல் அலுவலர் தயாரித்து நிறுவன இயக்குனர்களுடன் ஆலோசனை செய்து, அவர்களின் ஒப்புதல் பெற்று திட்டத்தை செயல்படுத்த வேண்டும்.

## கூட்டுப்பண்ணைய முறை

உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் உறுப்பினர்கள் பலரும் நிறுவனத்தின் திட்டத்தை ஏற்று ஒரே இரகம், பயிரிடும் காலம், சீரிய தொழில்நுட்பங்களைக் கடைப்பிடித்தால் உற்பத்தியான பொருட்களின் தரம் சீராக இருக்கும். உற்பத்திக்கு தேவைப்படும் இடுபொருட்களை நேரடியாக உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் பெற்று உறுப்பினர்களுக்கு குறைந்த விலையில் விற்பனை செய்ய இயலும். மேலும், உற்பத்தியான பொருள் அதிக அளவில் இருப்பதால் அதனை தரம் பிரித்து பதன் செய்து சந்தையிலோ அல்லது நுகர்வோர்க்கு நேரடியாகவோ விற்பனை செய்வதால் நல்ல விலையும் அதிக இலாபமும் ஈட்ட முடியும். ஆகவே, கூட்டுப்பண்ணைய முறையில் அதிக அளவில் உற்பத்தி செய்வதால் நன்மைகளை பெற இயலும்.

## சங்கிலித் தொடர் மேலாண்மை முறை

உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் சங்கிலித் தொடர் மேலாண்மை முறையைக் கடைப்பிடிக்க வேண்டும். இடுபொருள் வாங்குவது முதல் உற்பத்தியான வேளாண் பொருள் நுகர்வோரை சென்றடையும் வரையில் உள்ள பல்வேறு பணிகள் செய்வோர் அனைவரையும் ஒரு நிறுவனம் ஒருங்கிணைத்து அனைத்து பணிகளையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த திட்டத்தை தயாரித்து, செயல்படுத்தும் முறையே சங்கிலித் தொடர் மேலாண்மை முறையாகும். பொதுவாக இம்மேலாண்மை முறையை தொடர் விற்பனை நிறுவனம் (Retail Chain – Reliance, Walmart) மற்றும் பதன் செய்து பொருட்களை விற்கும் நிறுவனங்கள் செயல்படுத்துகின்றனர். ஆதலால், அவர்கள் அதிக இலாபம் பெறுகின்றனர். உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் தலைமையில் ஒருங்கிணைந்து இந்த மேலாண்மை முறையை செயல்படுத்தினால், உழவர்கள் பயன்பெறுவார்கள்.

மேற்கூறிய மேலாண்மை முறையை கடைப்பிடித்து உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் தனியார் நிறுவனம் போல செயல்பட்டு உறுபினர்களின் (உழவர்கள்) வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும். இந்த மேலாண்மை முறைகள் பற்றி வணிக மேம்பாட்டு இயக்குநரகத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள தொலைதூரக் கல்வி இயக்குனரகத்தின் மூலம் சான்றிதழ் பாடமும் வழங்கப்படுகிறது. இவற்றை பயன்படுத்தி உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் சிறப்பாக செயல்பட்டு உழவர்கள் தம் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற வேண்டும்.

# தொழில்நுட்ப வணிக காப்பகம் - ஓர் பார்வை

திரு. அ. வெ. ஞானசம்பந்தம்
தொழிநுட்ப வணிக காப்பகம், வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் –641 003. அலைபேசி : 94434 78700

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககத்தில் மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் உதவியுடன் 2011 ல் தொழில்நுட்ப வணிகக் காப்பகம் துவங்கப்பட்டது.

## தொழிநுட்ப வணிகக் காப்பகத்தின் சேவைகள்

- வேளாண் வணிக தொழில் முனைவோர்கள் புதிய கண்டுபிடிப்புகளை (இடுபொருள், உணவுப் பொருட்கள், இயந்திரங்கள்) உருவாக்க ஆலோசனை வழங்கி, நிதி கிடைக்க வழிகாட்டி, புதிய கண்டுபிடிப்புகளை சந்தைப் படுத்தி வேளாண் தொழில் சிறப்பாக நடைபெற ஆவன செய்தல்
- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மூலம் தொழில்நுட்பங்களை சந்தைப் படுத்துதல்
- உணவு பதினிடுவதற்கு பல்கலைக் கழக ஆய்வுக் கூடங்களைப் பயன்படுத்துவதற்கு ஏற்பாடு செய்து தருதல்
- ஆய்வு மற்றும் தரச் சான்றிதழ் பெற வழிவகை செய்தல்
- பதன்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களை ஆய்வு செய்யவும், உணவு மற்றும் வேளாண் பொருட்களின் கழிவுகளை ஆய்வு செய்யவும் கட்டண சலுகை பெற்று தருதல்
- வேளாண் வணிக மேம்பாடு குறித்த கருத்தரங்கங்கள் மற்றும் ஆய்வரங்கங்கள் நடத்துதல்
- தொழில்நுட்ப வணிக மேலாண்மை குறித்த ஆலோசனைகள் மற்றும் பயிற்சிகள் வழங்குதல்
- சந்தை இணைப்பு ஏற்படுத்துதல்
- தேசிய மற்றும் பன்னாட்டு நிகழ்வுகளில் பங்கேக்கும் வாய்ப்பு ஏற்படுத்துதல்



## வேளாண் வணிக தொழில்நுட்ப காப்பகத்தின் செயல்பாடுகள்

- இக்காப்பகத்தில் 306 தொழில் முனைவோர்கள் மற்றும் 8 வேளாண் உற்பத்தியாளர் நிறுவனங்கள் (FPO's) உறுப்பினர்களாக உள்ளனர்.

அவர்களின் தேவைக்கு ஏற்ப பயிற்சிகள் அளித்தல், சந்தைப் படுத்துவதற்கான வழிகாட்டுதல்கள், ஆராய்ச்சிக்கூட வசதிகள் ஏற்படுத்தி தருதல், பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பங்களை பெறுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தி தருதல் போன்ற சேவைகள் வழங்கப்படுகின்றன.

- ❖ உழவர் தினம், கொடிசியாவில் நடைபெறும் சர்வதேச வேளாண் கருத்துக்காட்சி போன்றவற்றில் இம்மையத்தின் உறுப்பினர்களுக்கு இடம் ஒதுக்கப்பட்டு அவர்களின் அங்கக இடுப்பொருட்கள், மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள், பண்ணை இயந்திரங்கள், கைவினைப் பொருட்கள், தேன் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள், விலங்கு விரட்டி காட்சிபடுத்தப்படுகின்றன.
- ❖ இந்த காப்பகத்தில் நபார்டு (NABARD) வங்கியின் நிதி உதவியின் மூலம் ரூ.12 இலட்சம் மதிப்பில் நவீன கருத்துக்காட்சி அரங்கம் உறுப்பினர்களின் தயாரிப்பு பொருட்களை காட்சிப்படுத்துவதற்காக அமைக்கப் பட்டுள்ளது.
- ❖ இதுவரை இப்பல்கலைக்கழகத்தின் 15 தொழில்நுட்பங்கள் சந்தைப் படுத்தப்பட்டுள்ளன.
- ❖ சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோருக்கான (MSME) மானியத்தொகை ரூ.97.75 இலட்சம் 15 உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும், 2017-18 ம் ஆண்டிற்கான மானியத் தொகையில் ரூ.206.5 லட்சத்திற்கான காசோலை ஏழு உறுப்பினர்களுக்கு மத்திய அமைச்சகத்தால் வழங்கப்பட்டுள்ளன.
- ❖ ஐந்து தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் தொழில் கடனாக இதுவரை ரூ.7 கோடி இக்காப் பகத்தின் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- ❖ தேசிய அங்கீகார வாரியம் (NABL) மூலம் அங்கீகாரம் பெற்ற உணவு மாதிரி சோதனை ஆய்வகம் மற்றும் பூச்சிக்கொல்லி நச்சியல் ஆய்வகத்தில் இக்காப்பகத்தின் உறுப்பினர்கள் தயாரித்த மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களின் தரத்தை பரிசோதிக்க கட்டண தொகையில் 33 சதவிகிதம் சலுகை பெற்றுத் தரப்படுகின்றது.
- ❖ இக்காப்பகத்தின் உறுப்பினர்கள் தயாரிக்கும் பொருட்களுக்கு காப்புரிமை பெற்று தருவதற்கான உதவிகள் செய்து தரப்படுகிறது.

## மத்திய அரசின் வேளாண் மற்றும் விவசாய நலத்துறையின் R-ABI திட்டம்

தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தின் வேளாண் தொழில்நுட்ப வணிகக் காப்பகத்தில் R-ABI எனும் புதிய திட்டத்தை மத்திய வேளாண் மற்றும் விவசாய நலத்துறை அமைச்சகம் அறிமுகம் செய்துள்ளது. இத்திட்டத்திற்கு ஐதராபாத்திலுள்ள தேசிய வேளாண் விரிவாக்க மேலாண்மை நிறுவனம் Institute for National Agricultural Extension (MANAGE) அறிவுசார் பங்குதாரராக செயல்படுகின்றது.

## இளம் பட்டதாரிகளுக்கான வேளாண் வணிக பயிற்சி (AOP)

தொழில் தொடங்க புதிய எண்ணங்களுடன் உள்ள இளம்

பட்டதாரிகள் புதிய பொருட்கள் கண்டுபிடிப்பதற்கான தங்களின் சிந்தனைகளை இந்த காப்பகத்திற்கு தெரிவிக்க வேண்டும். இதற்கான விண்ணப்பங்களையும், இதனை பெறுவதற்கான கால நேரத்தையும் ஊடகங்கள் மற்றும் பல்கலைக் கழகத்தின் இணையதளம் மூலம் தெரிவிக்கப்படும். பெறப்படும் விண்ணப்பங்களை தொழில்நுட்ப வல்லுனர் குழு மதிப்பீடு செய்து 20 நபர்களின் புதிய எண்ணங்கள் தேர்வு செய்யப்படும். தங்களின் எண்ணங்களை கொண்டு புதிய கண்டுபிடிப்புகள் செய்ய இரண்டு மாதங்களுக்கு ஆலோசனைகள் மற்றும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. பயிற்சியின் முடிவில் ஒவ்வொருவரும் ஒரு புதிய கண்டுபிடிப்பிற்கான திட்ட அறிக்கையை சமர்பிக்க வேண்டும். இத்திட்டத்தினை வல்லுனர் குழு பரிசீலனை செய்து புதிய கண்டுபிடிப்புகளை மேற்கொள்வதற்கு உதவித் தொகை வழங்க பரிந்துரை செய்யும். மேலும், அவர்கள் இந்த பயிற்சியில் பங்கேற்க ஊக்கத் தொகையாக ஒரு நபருக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.10,000/- (இரண்டு மாதங்களுக்கு) வழங்கப்படும்.

### வேளாண் தொழில் முனைவோருக்கான ஒருங்கிணைந்த பயிற்சி (SAIP)

மேற்கூறிய முறையிலேயே இந்த பயிற்சியும் வழங்கப்படுகின்றது. இப்பயிற்சி வேளாண்மையை மையமாக வைத்து தொழில் தொடங்கிய தொழில் முனைவோருக்கு அளிக்கப்படுகிறது. இவ்வாறு தொழில் தொடங்கி ஆரம்ப நிலையில் உள்ள 25 வேளாண் தொழில்முனைவோர்கள் தேர்வு செய்யப்பட்டு இப்பயிற்சி அளிக்கப்படுகின்றது. இதில் வணிகம் தொடர்பான தகவல்களும், ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன.

## தொழில்நுட்ப வணிக காப்பகத்தின் வழிகாட்டுதல் மற்றும் சேவைகள் மூலம் சாதனை புரிந்த தொழில்முனைவோரின் கருத்துக்கள்

நிறுவனம் : M/s . Cultivate India Software Pvt Ltd.
உறுப்பினர் : திரு. கௌதமன் இராமசாமி



எங்களது நிறுவனமான M/s. கல்டிவேட் இந்தியா சாப்ட்வேர், பிரைவேட் லிமிடேட் வேளாண் எண்படுத்தல் மற்றும் தரவுகளை ஆதாரமாக கொண்ட செயலியை உருவாக்கியுள்ளது. எங்கள் நிறுவனம் ஏப்ரல் 2018 முதல் தொழில்நுட்ப வணிக காப்பகத்தில் (TBI) உறுப்பினராக உள்ளது. தொழில்நுட்ப வணிக காப்பகம் எங்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகளும், வேளாண் கருத்துக்காட்சிகளில் பங்கு பெற வாய்ப்புகளும், வணிக இணைப்புகளும் அளித்துள்ளன.

மேலும், மத்திய அரசின் வேளாண் மற்றும் உழவர் மேம்பாட்டுத் துறையின் R-ABI திட்டத்தை செயல்படுத்தி துளிர் நிறுவனங்களுக்கு சிறந்த வாய்ப்புகளை ஏற்படுத்தி தருகின்றது. நாங்கள் ஏறத்தாழ ஏழு இலட்சம் விவசாயிகளை செயலி மூலம் இணைத்துள்ளோம். இந்த செயலியின் மூலம் விவசாயிகள் தங்களுக்கு

தேவையான அனைத்து உள்ளீடுகளையும் பெறலாம். இதற்கு தொழில்நுட்ப வணிக காப்பகம் எங்களுக்கு பல உதவிகளை செய்து வருகின்றது. நான் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவன் மற்றும் தொழில்நுட்ப வணிக காப்பகத்தின் உறுப்பினர் என்ற வகையில் பெருமைப்படுகிறேன்.

நிறுவனம் : M/s. Madura Agro Process Pvt Ltd.
உறுப்பினர் : திரு. M.N. வரதராஜன்



நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்த பின், தொழில் தொடங்கும் நோக்கில் தொழில்நுட்ப வணிக காப்பகத்தில் (TBI) 2013 ல் உறுப்பினராக சேர்ந்தேன். எனது M/s. மதுரா அக்ரோ பிராஸஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் பதனிடும் முறையில் Cocofresh என்ற பெயரில் இளநீர் பொதியலிடும் வணிகத்தை மேற்கொண்டு வருகிறது. எங்களது கோகோப்ரஸ் தமிழ்நாடு சட்டமன்ற கூட்டத்தொடரின் போது அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் Coco Fresh (இளநீர்) வழங்க தொழில்நுட்ப வேளாண் வணிக காப்பகம் (TBI) ஏற்பாடு செய்ததும், அவர்களிடம் பாராட்டுப் பெற்றதும் மறக்க இயலாத அனுபவம். எங்களது நிறுவனம் 200, 250 மி.லி. மற்றும் ஐந்து லிட்டர் பொதிகளில் இளநீர் இயற்கையான முறையில் குளிர் சங்கிலித் தொடரில் விற்பனை செய்கின்றது. ஐந்து லிட்டர் பொதியல் குளிர்சாதன விடுவிப்பி மூலம் உபயோகப்படுத்தலாம். இவ்வேளாண் காப்பகம் Tetra pack பொதியலுக்காக சேலம் ஆவினுடன் இணைப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. அதற்கான தொழில்நுட்பம், வணிகத்திற்குத் தேவையான சான்றிதழ் ஆகியவற்றை பெற இத்தொழில்நுட்ப வேளாண் வணிக காப்பகம் உறுதுணையாக இருந்தது. மேலும், தேசிய வங்கியில் ரூ. 85 இலட்சம் கடன் பெறவும் பரிந்துரை செய்தது. கடந்த ஆறு வருடங்களாக கருத்துக்காட்சி, அரசு துறைகளில் பரிந்துரை, வணிக விரிவாக்கம், MSME மற்றும் மத்திய அரசின் வேளாண் மற்றும் உழவர் மேம்பாட்டுத் துறையின் விவசாய நலத்துறை அமைச்சகத்தின் R-ABI ஆகியவை மூலமாக மானியம் பெறுவதற்கு வழிவகை செய்தல் போன்ற இன்றியமையாத சேவைகளை இக்காப்பகத்தின் மூலம் பெற்றுள்ளோம்.

மேலும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள், மத்திய மற்றும் மாநில அரசின் கொள்கை வகுப்பாளர்கள், திட்டத் தலைவர்கள் ஆகியோரை சந்தித்து, எங்களது தயாரிப்புகள் பற்றி எடுத்துரைக்கவும், தேவையான உதவிகளைப் பெறவும் இத்தொழில்நுட்ப வணிக காப்பகம் ஏற்பாடு செய்தது.

## தொடர்புக்கு

முதன்மை செயல் அலுவலர்
வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் – 641 003. தொலைபேசி : 0422 – 2969378

# மதுரை வேளாண் தொழில்முனைவோர் ஊக்குவிப்பு மையம்

**திரு. பி. சிவகுமார், முனைவர் வி.கே. பால்பாண்டி**
வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை – 625 104
அலைபேசி : 97398 50500

குறைவான மழை அளவு கொண்ட தென் மாவட்டங்களில் வேளாண் வணிகத்தை மேம்படுத்துவதற்காக நபார்டு (NABARD) வங்கியின் நிதி உதவியுடன் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வேளாண் தொழில்முனைவோர் உருவாக்க மையத்தை மதுரையில் உள்ள வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் உருவாக்கி உள்ளது. விவசாயிகளுக்கு உற்பத்தி, பதப்படுத்துதல், சந்தைப்படுத்துதல், ஏற்றுமதி மற்றும் கட்டுமான நிறுவனங்களுடன் தொடர் ஆகியவற்றில் ஆலோசனை வழங்க பத்து இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கி, கிராம பொருளாதாரத்தை அடுத்த நிலைக்கு எடுத்து செல்வது தான் இந்த வேளாண் வணிக ஊக்குவிப்பு மையத்தின் நோக்கமாகும்.

## தொலைநோக்குத் திட்டம்

இந்த மையம் உழவர் உற்பத்தியாளர்கள் நிறுவனங்களுக்கு வணிக ரீதியான சேவைகளை வழங்குவதையே தலையாய பணியாக கொண்டுள்ளது. தென் தமிழகத்தில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மூலம் உணவு மதிப்புக்கூட்டல் சங்கிலியை இணைத்து வணிகத் தொடர்புகளை வலுப்படுத்தி இந்தியாவின் உணவுப் பதப்படுத்துதல் துறையில் முன்னோடி மாநிலமாக ஆக்குவதோடு, சிறந்த வேளாண் வணிக மாதிரிகளை உலகத் தரத்தில் உருவாக்குவதும் இதன் நோக்கமாகும்.

## குறிக்கோள்கள்

- ❖ வேளாண் உற்பத்தியை அதிகப் படுத்துதல், விளை பொருட்களுக்கான சந்தை மதிப்பை உயர்த்துதல், விவசாயிகளை சந்தையோடு இணைத்தல், நிலைத்த பயிர் அமைப்புகளை உருவாக்கி கிராம பொருளாதாரத்தை தொழில்முனைவு நடவடிக்கைகள் மூலம் மேம்படுத்துதல்
- ❖ வேளாண் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மற்றும் இதர சந்தை நிறுவனங்களை ஒரே குடையின் கீழ் கொண்டு வந்து வருமானத்தைப் பெருகச் செய்தல்

## வேளாண் தொழில் முனைவோர் உருவாக்க மையத்தின் எதிர்கால நடவடிக்கைகள்

- ❖ பல்வேறு வேளாண் சார்ந்த தொழில்கள், வேளாண் வணிகர்களுக்கு இடையேயான தொடர்புகளை ஏற்படுத்தி மதிப்புக்கூட்டுதல், சங்கிலி மேலாண்மை சார்ந்த வேளாண்

வணிக மாதிரிகளை (Agriculture Models) உருவாக்குதல்

- ❖ உணவு நிறுவனங்களுக்கு வேளாண் பொருட்கள் வழங்கும் சங்கிலி தொடரை உறுதி செய்தல்
- ❖ கிராமங்களின் இயற்கை ஆதாரங்களை ஒன்றுதிரட்டி கிராம கட்டுமானம் மற்றும் வருமானத்தை அதிகப்படுத்துதல்
- ❖ வேளாண் உணவு சார்ந்த தொழில்கள் தொடங்குவதற்கும், அதை வணிகப்படுத்துவதற்கான அனுகூலங்களையும் ஒரே இடத்தில் வழங்குதல்
- ❖ வேளாண் வணிகத்திற்கான பல்வேறு நடைமுறைகளை, உழவர்களுக்கு தெளிவு படுத்துவதற்கு ஒரு தளமாக அமைதல்
- ❖ வேளாண் விளைபொருட்களை மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களாக தயார் செய்வதற்கான சூழலை உருவாக்கித் தருதல், குறிப்பிட்ட வேளாண் பொருட்களின் வணிகத்திற்கான குழுக்களை தேர்வு செய்து அது சார்ந்த தொழில்களை ஊக்கப்படுத்துதல்

## வேளாண் தொழில்முனைவோர் உருவாக்க மையத்தின் வழிகாட்டுதலால் பயன் பெறப்போகும் பகுதிகள்

- ❖ மதுரை மல்லியின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வணிகம் உயர்ந்துள்ளது. ஏற்கனவே, உசிலம்பட்டி, திருப்பரங்குன்றம் மற்றும் செல்லம்பட்டி பகுதிகளில் 30 மல்லி விவசாயிகள் குழு உள்ளது. எனவே, மல்லிகை ஏற்றுமதி வாணிபத்தை மேலும் மேம்படுத்த இம்மையம் உறுதுணையாக அமையும்.
- ❖ கூடல் நகரில் உள்ள தானியங்கள், பயறு வகைகள் பதப்படுத்தும் நிலையங்களின் ஆற்றலை அதிகப்படுத்த ஏராளமான வாய்ப்புகள் உள்ளன.
- ❖ சிவகங்கை, விருதுநகர் மற்றும் மதுரையின் சில பகுதிகளில் எண்ணெய் வித்துப் பயிர்கள் உற்பத்தியில் சிறந்து விளங்குவதால் அது சார்ந்த தொழில்கள் தொடங்க வாய்ப்புகள் அதிகம் உள்ளன.
- ❖ மதுரையைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் கரும்பு அதிகமாக பயிரிடப்பட்டாலும், எத்தனால் தவிர மற்ற கரும்பு சார்ந்த பொருட்களைத் தயாரிக்க ஏராளமான வாய்ப்புகள் உள்ளன.
- ❖ ஒட்டன்சத்திரம் காந்தி காய்கறி சந்தையின் மூலம் மிகுந்த அளவில் விற்கப்படும் காய்கறிகள், மதிப்புக்கூட்டப்பட்ட பொருளாக மாற்ற அனுகூலங்கள் அதிகமாக உள்ளன.
- ❖ காப்பி உற்பத்தியில் சிறந்து விளங்கும் பழனி மலை விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் மேம்பட சிறந்த வாய்ப்புகள் உள்ளன.
- ❖ தமிழகத்தின் 25 சதவீத முந்திரி, சிவகங்கையில் உற்பத்தியாவதால்

அது சார்ந்த தோட்டக்கலை தொழில் முனைவு வாய்ப்புகள் அதிகமுள்ளன.

- ❖ இந்தப் பகுதியில் சிறுதானியங்களின் கூட்டமைப்பு அமைவதற்கான அனுகூலங்களும் அதிக உள்ளன.
- ❖ இராசபாளையம் பருத்தி சார் தொழிலும், சின்னமனூர் வாழை சார் தொழிலும் நடைபெற்று வரும் நிலையில் அவற்றை மேலும் மேம்படுத்த வாய்ப்புகள் உள்ளன.
- ❖ கம்பம் பகுதியில் திராட்சையும், பெரியகுளம் பகுதியில் மாம்பழமும் அதிகம் பயிரிடப்படுவதால் அது சார்ந்த தொழில் தொடங்க அதிக வாய்ப்புகள் உள்ளன.

## தொழில்முனைவோரை உருவாக்குவதற்கான அணுகு முறை

ஒரே தளத்தில் திட்டங்களை வகுத்து கொடுத்தல், நிதி ஆதாரம், தொழிற்சாலைகள் இணைப்பு, பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப உதவி கிடைக்கச் செய்தல் போன்றவை இம்மையத்தின் முதன்மை அணுகு முறையாகும். மேலும், இம்மையம் வேளாண் சார்ந்த சுய உதவிக்குழுக்களுக்கு வணிகம் தொடர்பான ஆலோசனைகள் வழங்குதல், வேளாண் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் தொழில்முனைவோர்களுக்கு வழிகாட்டுதல் போன்ற செயல்பாடுகளின் மூலம் சிறப்புற்று வருகிறது.

## தொழில் சார்ந்த குழுக்கள் அமைத்தல்

அந்தந்த பகுதியில் விளையும் வேளாண் பொருட்கள் சார்ந்த அடிப்படையில் விவசாயிகளை குழுவாக ஒன்று திரட்டுதல் இரண்டாவது அணுகுமுறையாகும். கீழ்க்காணும் குழுக்கள் இம்மையத்தினால் ஊக்குவிக்கப்படும்.

- ❖ கூடல்நகர் தானிய குழு
- ❖ உசிலம்பட்டி மல்லி குழு
- ❖ இராசபாளையம் ஸ்ரீவில்லிபுத்தூர் பருத்தி குழு
- ❖ சிவகாசி வேளாண் பொருட்கள் பேக்கிங் குழு
- ❖ சின்னமனூர் வாழை, கம்பம் திராட்சை குழு
- ❖ புதுக்கோட்டை தென்னை குழு
- ❖ சிவகங்கை சிறுதானிய குழு
- ❖ இளையாங்குடி முந்திரி குழு
- ❖ கரூர் கரும்பு குழு
- ❖ திருப்புவனம் பட்டுப்புழு வளர்ப்பு குழு
- ❖ மதுரை மேக்ரோ ஆல்கே குழு
- ❖ கொடைக்கானல் காளான் குழு
- ❖ பட்டிவீரன்பட்டி காபி குழு
- ❖ கொடைக்கானல் மூலிகை பயிர்கள் குழு
- ❖ தேனி முருங்கை குழு
- ❖ பெரியகுளம் மா, சப்போட்டா குழு
- ❖ ஒட்டன்சத்திரம் காய்கறி குழு
- ❖ திண்டுக்கல் பல்வேறு கீரைகள் குழு
- ❖ கொடை டீ குழு
- ❖ சங்கரன்கோவில் எலுமிச்சை குழு
- ❖ தடியன்குடிசை மணம் ஊட்டப்பட்ட எண்ணெய் குழு

தற்பொழுது இந்த மையத்தில் 64 தொடக்க நிலையில் உள்ள நிறுவனங்கள் மற்றும் 76 உழவர் உற்பத்தியாளர்

நிறுவனங்கள் உறுப்பினராக உள்ளன. மேலும், மதுரை வேளாண் கல்லூரியில் பயிலும் 40 மாணவர்களை தொழில் முனைவோர்களாக உருவாக்குவதற்கு இம்மையம் முயற்சிகளை மேற் கொண்டு வருகிறது.

இனிவரும் காலங்களில் இம்மையம் வேளாண் சார்ந்த அறிவுசார் சொத்துரிமை மற்றும் புவியியல் குறியீடுகளை பெறுவதற்கான வாய்ப்புகளையும் உருவாக்கி கொடுக்கும்.

## தொடர்புக்கு


முதன்மை செயல் அலுவலர்
வேளாண் தொழில் முனைவோர் ஊக்குவிப்பு மையம்
வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்
மதுரை -625104. தொலைபேசி : 0452 -2424550
மின்னஞ்சல் : ceo@mabrif.com


❀

## வேளாண் தொழில் சிந்தனைத் தொடர் அங்கீகாரத்திற்கான பூட்கேம் (Idea Validation Boot Camp) - ஒரு கண்ணோட்டம்

வேளாண் தொழில் சார்ந்த சிந்தனைகளை வணிகமாக மாற்றுவதற்கும், பல்வேறு வணிக நுட்பங்களை பற்றி உணரவும் மூன்று நாள் பூட்கேம்ப் பயிற்சி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு அளிக்கப்பட்டது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 11 தொகுப்பு மற்றும் இணைப்பு கல்லூரிகளிலிருந்து மொத்தம் 27 அணிகள் (54 மாணவர்கள்) தெரிவு செய்யப்பட்டனர். மாணவர்களின் புதிய வணிகம் சார்ந்த சிந்தனைகளை வல்லுனர்கள் கொண்டு சீர்ப்படுத்தி தொழில் துவங்குவதற்கான வணிக திட்டத்தை தயாரிக்க பயிற்சி அளிக்கப்பட்டது.



# திருச்சிராப்பள்ளி வேளாண் வணிக தொழில்முனைவோர் ஊக்குவிப்பு மையத்தின் சேவைகள்

**முனைவர் பி. மாசிலாமணி**
**முனைவர் ச. செல்வம்**
**திரு. எஸ். சந்தோஷ்**

அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி
மற்றும் ஆராய்ச்சி நிலையம்
திருச்சிராப்பள்ளி -620 027
அலைபேசி : 6380751502

திருச்சி, கரூர், பெரம்பலூர், தஞ்சாவூர், திருவாரூர், திண்டுக்கல், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் உள்ள வேளாண்மை சார்ந்த தொழில் முனைவோர்களை ஊக்குவிப்பதற்காகவும், இளம் தொழில்முனைவோர்களை உருவாக்குவதற்காகவும் திருச்சியிலுள்ள அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் வேளாண் வணிக தொழில்முனைவோர் ஊக்குவிப்பு மையம் உருவாக்கப்பட்டுள்ளது. இம்மையம் முதன்மை பயிர்களான வாழை, பெரு மற்றும் சிறுதானியங்கள், நெல், தேங்காய், காய்கறிகள் மற்றும் பழங்கள் போன்றவற்றில் மதிப்புக்கூட்டுதல் சார்ந்த வேளாண் தொழில் துவங்குவதற்கு தேவையான விழிப்புணர்வு மற்றும் சேவைகளை அளித்து வருகிறது.

மானாவாரி விவசாயம், வேளாண் பொறியியல், உவர் மண் மேலாண்மை மற்றும் உணவு பதனிடுதல் போன்ற துறைகளில் வேளாண் தொழில் தொடங்குவதில் உள்ள பிரச்சனைகளுக்கு சரியான தீர்வுகளை அளித்து தேவையான வழிகாட்டுதல்களையும் வழங்கி வருகிறது.

மேலும், புதிய தொழில் முனைவு சிந்தனையோடு வருபவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளை வல்லுநர்கள் வழங்குதல் மற்றும் அவர்களுக்கு தேவையான பல்வேறு உள்கட்டமைப்பு வசதிகளை செய்து கொடுத்தும் இம்மையம் மிகச்சிறப்பாக 2018 லிருந்து இயங்கி வருகின்றது. தற்போது இம்மையத்தில் 39 தொழில்முனைவோர்கள் உறுப்பினர்களாக இணைந்துள்ளனர். இவற்றில் ஐந்து உறுப்பினர்கள் உணவுப் பதப்படுத்துதல் தொடர்பாகவும், மூன்று உறுப்பினர்கள் பண்ணை இயந்திரங்கள் தொடர்பான தொழிலையும், இரண்டு உறுப்பினர்கள் இணையவழி தொழில்நுட்பங்கள் (IoT) தொடர்பான தொழிலையும் மேம்படுத்துவதற்குத் தேவையான சேவைகளை இம்மையத்தின் மூலம் பெற்று பயனடைந்து வருகின்றனர்.

## உள்கட்டமைப்பு வசதிகள்

இந்தத் தொழில் மேம்பாட்டு மையத்தில் பழரசங்கள் தயாரிக்கும் பிரிவு, அடுமனை பொருட்கள் தயாரிக்கும் பிரிவு, உணவுப் பதப்படுத்துதல் பிரிவு, விதை முறைப்படுத்துதல் மற்றும் தேன் பதப்படுத்துதல் பிரிவு ஆகிய பிரிவுகள் கொண்டு இயங்கி வருகின்றன.





## சேவைகள்

- ❖ வேளாண்மையில் புதிய கண்டு பிடிப்புகளை உருவாக்குவதற்கு வழிகாட்டுதல்.
- ❖ பாரம்பரிய உணவு மதிப்புக்கூட்டுதல் மற்றும் சந்தைப்படுத்துதலுக்கு வழிகாட்டுதல்.
- ❖ வேளாண் பொறியியலில் புதிய கண்டுபிடிப்புகளுக்கு ஆலோசனை வழங்குதல்.

மேலும், இம்மையத்தின் உறுப்பினர்கள் கீழ்வரும் சேவைகளை பெற்று வருகின்றனர்.

- ❖ வேளாண் வல்லுநர்களின் வழிகாட்டுதல்.
- ❖ வேளாண் தொழில் அனுபவம் உள்ள தொழில் அதிபர்களுடன் கலந்துரையாடல்.
- ❖ தொழில்நுட்பம் சம்பந்தமான பரிந்துரையைப் பெறுதல்.
- ❖ வேளாண் பொருட்களை சந்தைப் படுத்துதவதற்கான இணைப்புகளை வழங்குதல்.
- ❖ நிதி மற்றும் அரசு மானியத்தைப் பெற்றுத்தருதல்.

மேலும், புத்தாக்க சிந்தனைகளோடு வரும் கிராமப்புற இளைஞர்கள் மற்றும் விவசாயிகளுக்கு முன்னுரிமை கொடுத்து வேளாண் சார்ந்த தொழில்களை துவங்குவதற்குத் தேவையான விழிப்புணர்வையும், பயிற்சியையும் வழங்கி வருகின்றது.

## பயிற்சிகள்

- ❖ வணிக செயல்பாடுகள் பற்றிய தொழில்நுட்பங்கள்
- ❖ செயற்கை நுண்ணறிவு மற்றும் இணையதள தொழில்நுட்பங்கள்
- ❖ சிறுதானிய மதிப்புக்கூட்டுதல்
- ❖ தேனீ வளர்ப்பு
- ❖ காளான் வளர்ப்பு
- ❖ பழரசம் தயாரிப்பு

## தொடர்புக்கு


**முதன்மை செயல் அலுவலர்**

வேளாண் வணிக தொழில்முனைவோர் ஊக்குவிப்பு மையம்
திருச்சிராப்பள்ளி வேளாண் வணிக மேம்பாட்டு மையம்
அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி
மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருச்சிராப்பள்ளி - 620 027
அலைபேசி : 6380751502
மின்னஞ்சல் : trichyagribusiness@gmail.com

# கிள்ளிகுளம் வேளாண் வணிக தொழில்முனைவோர் ஊக்குவிப்பு மையம்

திரு. பிரகதேஸ் சுப்பிரமணியம்
முனைவர் இறைவன் அருட்கனி அய்யநாதன்

வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்
கிள்ளிகுளம், வல்லநாடு - 628 252
அலைபேசி : 7373284419

திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய தென் மாவட்டங்களில் வேளாண் சார்ந்த தொழில் முனைவோர்களை ஊக்குவித்து அவர்களின் வருமானத்தை உயர்த்தவும், இளம் தொழில்முனைவோர்களை உருவாக்கவும், கிள்ளிகுளத்தில் அமைந்துள்ள வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் வேளாண் வணிக தொழில்முனைவோர் ஊக்குவிப்பு மையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இம்மையம் பனை, வாழை, சிறு மற்றும் குறு தானியங்கள், பருப்பு வகைகள், பூக்கள், காய்கறிகள் மற்றும் பழங்களில் மதிப்புக்கூட்டுதல் தொழில்களை துவங்குவதற்கும், தொழில் செய்வோரை மேம் படுத்துவதற்கும் அமைந்துள்ளது.

சிறு மற்றும் குறு தானிய வகைகளை மதிப்புக்கூட்டுதல் தொடர்பான அனைத்து இயந்திர உபகரணங்கள், குளிர் பதன அறை, பேக்கரி இயந்திரங்கள், சூரிய உலர்த்தி, நீரா சேமிப்புக் கலன் மற்றும் பதப்படுத்தும் இயந்திரங்கள், தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கான ரோபாட்டிக்ஸ் ஆய்வகம் போன்றவை இம்மையத்தில் இடம் பெற்றுள்ளன.





## மரங்கள் நுனிவெட்டும் இயந்திரம்



கோவில்பட்டியைச் சேர்ந்த விவசாயி திரு. நவநீதன் (69 வயது), மரங்களில் கவாத்து செய்வதற்கான இயந்திரத்தை வடிவமைத்துள்ளார். இந்த இயந்திரம் விவசாயிகள் சுலபமாக பயன்படுத்தும் வகையிலும், ஊடு உழவு செலவை குறைக்கும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. வேலையாட்களின் தேவையை ஆறில் ஒரு பங்காகவும், செலவினை 85 சதவிகித அளவிற்கு குறைக்க ஏற்றதாகவும் இந்த இயந்திரம் அமைந்துள்ளது.

இந்த இயந்திரம் சிறியதாகவும், பயன்படுத்த எளிமையானதாகவும் உள்ளதால் பண்ணையில் பெண் தொழிலாளர்கள் இதனைப் சுலபமாக பயன்படுத்தலாம்.

கொய்யா, மா மற்றும் பருத்தி போன்ற பயிர்களில் கவாத்து செய்வதற்கு இந்த இயந்திரம் பொறுத்தமானது.

முதுகில் சுமக்கும் வண்ணமாக இந்த இயந்திரத்தை வடிவமைக்க இம்மையத்தை அணுகினார்.

இவர் வேளாண் வணிக ஊக்குவிப்பு மையத்தின் மூலம் மின் கலத்தின் எடையை குறைத்து சூரிய ஒளி மூலம் இவ்வியந்திரம் இயங்கும் விதத்திலும், மரங்களின் நுனியை வெட்டுவதற்கு ஏற்ற உயரத்தை மாற்றியமைக்கும் விதத்திலும் வடிவமைத்துக் கொடுக்கப்பட்டது. மேலும், காப்புரிமை பெறுவதற்கான ஏற்பாடுகளையும் இம்மையம் (Killikulam Agri Business Incubation Forum -KABIF) செய்து கொடுத்துள்ளது.

## மூலிகை பொருட்களில் புதுமை



திரு. யு. ஜெயசீலன் என்பவர் (45 வயது), திருநெல்வேலியில், MD, INRI சீலன் என்ற நிறுவனத்தை தொடங்கி, இந்நிறுவனத்தின் மூலம் மூலிகைப் பொருட்களையும், இயற்கையில் கிடைக்கும் மூலப்பெருட்களின் மூலம் பலதரப்பட்ட இயற்கை பொருட்களையும் தயாரிக்கின்றார்.

மூலிகை தேனீர், மூலிகை பற்பசை, மூலிகை தேன், இயற்கை தலைமுடி வர்ணம் மற்றும் பல இயற்கை சார்ந்த பொருட்களை உற்பத்தி செய்து வருகிறார்.

இவருக்குத் திட்ட அறிக்கை தயாரிப்பது, உணவுப் பொருட்களுக்கான FSSAI சான்றிதழ் பெறுவது, பொருட்களை ஏற்றுமதி செய்வது போன்ற சேவைகளுக்கு KABIF ஆலோசனைகளை வழங்கியது.

## இயற்கை பண்ணையம் மற்றும் மதிப்புக்கூட்டுதலின் புதுமை

தென்காசியில் அமைந்துள்ள Jaycee Organics என்ற நிறுவனத்தை திரு. K. ஜெயச்சந்திரன் (74 வயது), அவர்கள் இயற்கை விவசாய முறையில் நெல்லி, மா, வாழை, தேங்காய், முருங்கை மற்றும் மூலிகை பொருட்களை உற்பத்தி செய்வதுடன் அதில் மதிப்புக் கூட்டுதலும் செய்து சந்தைப் பொருளாக மாற்றி அவற்றை பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறார். இவருக்கு சந்தை இணைப்பு மற்றும் மூலப்பொருள் கொள்முதலுக்கான தொடர்பு ஆகியவற்றை KABIF உருவாக்கிக் கொடுத்துள்ளது.



## திறன் மேம்பாட்டு பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு கூட்டங்கள்

- ❖ வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இளங்கலை மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்கு KABIF ன் ஊக்குவிப்பு மற்றும் தொழில்முனைவோர் பயிற்சி
- ❖ KIFC19 - KABIF உணவு
- ❖ தேனீ வளர்ப்பு பயிற்சி
- ❖ AGPREUN ideathon போட்டி
- ❖ மானூர் கிராம பனை மற்றும் வாழை விவசாயிகளுக்கு KABIF ன் சேவைகள் மற்றும் மேம்பாடு தொடர்பான விளக்கக்கூட்டம்
- ❖ பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரியில் KABIF ன் சேவைகள் மற்றும் மேம்பாடு தொடர்பான கண்காட்சி
- ❖ காளான் வளர்ப்பு பயிற்சி
- ❖ பனை, மதிப்புக்கூட்டுதல் பயிற்சி
- ❖ வேளாண் வணிக வலுவூட்டல் மற்றும் கண்டுபிடிப்புகள் தொடர்பான பயிற்சி

### தொடர்புக்கு

முதன்மை செயல் அலுவலர்
வேளாண் வணிக தொழில்முனைவோர் ஊக்குவிப்பு மையம்
வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கிள்ளிகுளம்
தூத்துகுடி மாவட்டம்
தொலைபேசி : 04630 – 261226
மின்னஞ்சல் : ceokabif@gmail.com

# EDII– பெரியகுளம் தோட்டக்கலை தொழில்முனைவோர் மேம்பாட்டு மையம்

**முனைவர் த. ஆறுமுகம், முனைவர் சி. சுபேஷ் ரஞ்சித்குமார், திரு. செ. வசந்தன்**
தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம, பெரியகுளம் – 635 604

தொழில்முனைவோர்கள் சந்திக்கும் பல்வேறு சவால்களுக்கு உதவி அளிக்கும் வகையில் சென்னையிலுள்ள தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனமும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமும் இணைந்து பெரியகுளத்திலுள்ள தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பெரியகுளம் தோட்டக்கலை தொழில்முனைவோர் மேம்பாட்டு மையத்தை (EDII –PERIYAKULAM HORTI BUSINESS INCUBATION FORUM) துவக்கியுள்ளனர். இம்மையம் கம்பெனிகள் சட்டம் 2013 ன் படி செக்சன் 8 ன் கீழ் பதியப்பட்ட ஒரு லாப நோக்கில்லா நிறுவனம். இம்மையம் தோட்டக்கலைத் துறையைச் சார்ந்த தொழில்நுட்பங்களை பயன்படுத்தி தொழில் துவங்க விரும்புவோருக்கு, துவக்கம் முதல் தொழில்முனைவோர் ஆகும் வரை தேவையான உதவிகளை புரிகின்றது. புதிய தொழில்முனைவு யோசனையோடு வருபவர்களை சம்மந்தப்பட்ட துறையைச் சார்ந்த நிபுணரிடம் இணைத்தல், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி தொடர்பான வழிகாட்டுதல், தொழில்முனைவோர்க்கு தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் செய்து தருதல் போன்ற பல சேவைகளை இம்மையம் வழங்குகிறது. 2019 ல் சிறந்த 500 தொழில்முனைவோர் மையங்களின் தேர்வில் பெரியகுளம் தொழில் மேம்பாட்டு மையம் தேர்வானது குறிப்பிடத்தக்கது.




## உறுப்பினர் சேவைகள்

- ❖ பெரியகுளம் தொழில் மேம்பாட்டு மையத்தின் பல்வேறு சேவைகளை பெறுவதற்கு தொழில்முனைவோர் தங்களை உறுப்பினர்களாக பதிவு செய்து கொள்வது அவசியமாகிறது.
- ❖ உறுப்பினர்களாக பதிவு செய்பவர்களுக்கு தொழில்நுட்ப உதவிகள், கடன் திட்டங்கள், சந்தைப்படுத்துதல், காப்புரிமை பெற ஆலோசனை என்று அனைத்து உதவிகளும் ஒரு குடையின் கீழ் வழங்கப்படுகிறது. மேலும், தொழில்முனைவோர் மையம் நடத்தும் பல்வேறு பயிற்சிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பையும், அதன் மூலம் வியாபார தொடர்புகளை அதிகப்படுத்தி கொள்ளும் வாய்ப்பையும் பெறுகின்றனர்.

வேலையில்லா கிராமப்புற இளைஞர்களுக்கு தொழில்முனைவோர் பயிற்சி அளிக்கும் யுவசக்தி திட்டத்தின் மூலம் இளைஞர்களுக்கு நாற்றங்கால் அமைத்தல், காய்கறி மற்றும் பழங்களை மதிப்புக்கூட்டுதல் போன்றவற்றில் பல்வேறு தொழில்நுட்ப் பயிற்சிகளும், அதனை சந்தைப்படுத்தும் முறைகளும், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி பற்றியும் பயிற்று விக்கப்பட்டு வருகிறது.

இம்மையத்தின் உறுப்பினர்கள் தயாரித்த பொருட்களுக்கு தர அடையாலாம் (Branding) பெறுவதற்கும், அவற்றை சந்தைப்படுத்துவதற்கும் இம்மையம் உதவிகளை வழங்கி வருகிறது. எந்த ஒரு பொருளையும் சந்தைப்படுத்த சிப்பமிடுதல் (Packing) முக்கியமான பங்கு வகிக்கிறது.

இம்மையத்தின் உறுப்பினரான ஆர்வீஎம் பையோடெக் நிறுவனம் (RVM - Bio Tech) தயாரித்த பொருளின் பேக்கிங்கை மாற்றியமைத்ததன் மூலம் அப்பொருளின் விற்பனை அதிகரித்துள்ளதாக அதன் உரிமையாளர் திரு. வீரமணிகண்டன் தெரிவித்தார். மற்றுமொரு உறுப்பினரான திருமதி. கற்பகம் அவர்கள், இம்மையத்தின் உதவி பெற்று பேக்கிங்கை மாற்றியமைத்ததன் மூலம் அவருடைய ஆன்லைன் வியாபாரம் பெருகி உள்ளதாக கூறினார். இது தவிர தங்களின் உற்பத்தி பொருட்களை விற்பனை செய்து தர, மார்கெட்டிங் உதவி கோருகின்ற உறுப்பினர்களுக்கும் இம்மையத்தின் பலமிக்க சந்தை தொடர்புகளின் மூலம் விற்பனை வாய்ப்புகள் உருவாக்கித் தரப்படுகின்றன.

## உள்கட்டமைப்பு வசதிகள்

- இம்மையத்தின் சார்பில் இதன் உறுப்பினர்களுக்கும், தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்ட விவசாயிகளின் பயன்பாட்டுக்கென்று பல்வேறு உள்கட்டமைப்பு வசதிகள் செய்து தரப்படுகின்றன.
- முருங்கை சாகுபடி செய்யும் விவசாயிகளின் வசதிக்காக சூரிய மின்சக்தியில் இயங்கும் முருங்கை இலை உலரவைக்கும் அமைப்புகள், உலரவைத்த இலைகளை பொடியாக்கும்









முந்தைய பேக்கிங்




புதிய பேக்கிங்



முந்தைய பேக்கிங்




புதிய பேக்கிங்

இயந்திரங்கள், மாம்பழக் கூழ் தயாரிக்கும் இயந்திரங்கள், தானியங்கி முறையில் தட்பவெப்ப நிலையைக் கட்டுப்படுத்தும் பசுமைக் கூடாரம் போன்ற பல உள்கட்டமைப்பு வசதிகள் நிறுவப்பட்டு வருகிறது.

## தொழில்முனைவோர்களின் நண்பன்

தேனி, மதுரை, திண்டுக்கல் மாவட்ட தொழில்முனைவோர்களுக்கு உரிய உதவிகள், ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்களை வழங்கும் ஒரு உற்ற நண்பனாக பெரியகுளம் தோட்டக்கலை தொழில்முனைவோர் மேம்பாட்டு மையம் விளங்குகிறது. புத்தாக்க சிந்தனைகளுக்கு முன்னுரிமை கொடுத்து புதிய தொழில்நுட்பங்கள், சிறு மற்றும் குறு விவசாயிகளை சென்றடையும் வண்ணம் தொழில் முனைவோர்களை ஊக்கப்படுத்தி வருகிறது இம்மையம்.



வேலையில்லா கிராமப்புற இளைஞர்களின் வழிகாட்டி - ஆடு வளர்ப்பு பயிற்சி

## தொடர்புக்கு

முதன்மை செயல் அலுவலர்
பெரியகுளம் தோட்டக்கலை
தொழில்முனைவோர் மேம்பாட்டு மையம்
தோட்டக்கலைக் கல்லூரி
மற்றும் ஆராய்ச்சி நிலையம்
பெரியகுளம் - 635 604
தொலைபேசி : 04546 - 231726
அலைபேசி : 93619 21828
மின்னஞ்சல் : ediiphbif@gmail.com

# வனவேளாண்மை தொழில்முனைவோர் ஊக்குவிப்பு மையம்

முனைவர் கா. த. பார்த்திபன், முனைவர் சி. சிந்தியா பெர்னாண்டஸ், முனைவர் ஐ. சேகர்
வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் , மேட்டுப்பாளையம் - 641 301
அலைபேசி : 94435 05844

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஓர் அங்கமான மேட்டுப்பாளையத்தில் அமைந்துள்ள வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் கடந்த முப்பதாண்டுகளுக்கு மேலாக வனவியல் சார்ந்த கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகளை மேற்கொண்டு வருவதுடன் வன வேளாண்மை சார்ந்த புதிய தொழில்நுட்பங்களையும், சந்தைப் படுத்துதலில் புதிய நுணுக் கங்களையும் அறிமுகப்படுத்தியுள்ளது. புதிய அணுகுமுறைகளின் மூலம் விவசாயிகளும், தொழிற்சாலைகளும் சந்தித்து வந்த சவால்களை நிவர்த்தி செய்யும் விதமான தீர்வுகளை வழங்கியுள்ளது. இதன் மூலம் எண்ணற்ற விவசாயிகளும், தொழில்முனைவோரும், தொழிற்சாலைகளும் பயனடைந்துள்ளனர். இது தவிர வேகமாக வளர்ந்து அதிகளவில் பலன் தரக்கூடிய மரவகைகளைக் கண்டறிந்து, அவற்றை மேம்படுத்தி விவசாயிகளுக்கு வழங்கியிருப்பதுடன், நாற்றுக்களை உண்டாக்க புதிய யுத்திகளை பயன்படுத்தி உயர்தர நாற்றுக்களை உற்பத்தி செய்யும் வழிமுறைகளில் தொடர் பயிற்சிகளையும் வழங்கி வருகிறது. அறுவடைக்குப் பின் மதிப்புக் கூட்டலிலும் பல்வேறு நுட்பங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

## வனமேலாண்மை தொழில்முனைவோர் ஊக்குவிப்பு மையத்தின் குறிக்கோளும், செயல்பாடுகளும்

மேற்கூறிய முயற்சிகளின் அடுத்தகட்ட நகர்வாக, வனக் கல்லூரி வளாகத்தில் புதியதாக "வன வேளாண்மை தொழில் முனைவோர் ஊக்குவிப்பு மையம்" துவங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு அரசின் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் (Entrepreneurship Development & Innovation Institute, Chennai) நிதியுதவியுடன் துவங்கப்பட்டுள்ள இந்த தொழில் முனைவோர் ஊக்குவிப்பு மையம் பலதரப்பட்ட சேவைகளை வழங்குகிறது.

- ❖ தொழில் தொடங்க ஆர்வமுள்ளவர்களைக் கண்டறிந்து அவர்களை ஊக்கப்படுத்தி, தொழில்முனைவோர் ஆவதற்கான வழிமுறைகளைத் தெரிவித்தல்
- ❖ புதிய தொழில் வாய்ப்புகளைக் கண்டறிந்து, ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு குறிப்பாக கிராமப்புற இளைஞர்களுக்கு தகுந்த பயிற்சிகளை அளித்து வனவேளாண்மை சார்ந்த தொழில்முனைவோராக்குதல்
- ❖ மகளிர் மற்றும் மலைவாழ் மக்களுக்கான வாய்ப்புக்களை அறிமுகப்படுத்தி, முறையான பயிற்சிகள் அளித்து அவர்களைத் தொழில்முனைவோராக உருவாக்குதல்

- வன வேளாண்மைப் பொருட்களின் உற்பத்தி சார்ந்த தொழிற் சாலைகளுக்கும், நிறுவனங்களுக்கும் ஆலோசனைகள் வழங்கி அவற்றின் செயல்திறனை மேம்படுத்துதல்
- விவசாயிகளுக்கும், தொழில் நிறுவனங்களுக்குமிடையில் தொடர்பு களை உருவாக்கி, உறவுகளை மேம்படுத்தி அதன் மூலம் வன வேளாண்மைப் பயிர்களுக்கான சந்தையை உறுதி செய்வதுடன், தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப்பொருட்கள் கிடைப்பதையும் உறுதிப்படுத்துதல்
- வனக்கல்லூரியின் தொடர் ஆராய்ச்சிகளின் மூலம் கண்டறியப் படும் புதிய இரக மரங்களையும், தொழில்நுட்பங்களையும் சந்தைப் படுத்துதல்
- தொழில் முனைவோருக்குத் தேவையான அடிப்படை கட்டமைப்புகளையும், அலுவலக் இடங்களையும், இயந்திரங்கள் மற்றும் ஆய்வக வசதிகளையும் பகிர்மான அடிப்படையில் உருவாக்கித் தருதல்
- நாற்றுப் பண்ணைகள் துவங்கு வதற்கான புதிய நுட்பங்களில் பயிற்சிகள் அளித்து, பண்ணைகள் அமைப்பதற்காக வனக் கல்லூரியினால் வெளியிடப்பட்ட இரகங்களைப் பெருக்கி, சந்தைப் படுத்துவதற்கான உரிமங்களை வழங்குதல்
- தொழில்முனைவோர் புதிய தொழில் தொடங்குவதற்கான விரிவான திட்ட அறிக்கையைத் தயார் செய்வதற்கு உதவுவதுடன், அவர்களுக்கான வங்கிக்கடன் மற்றும் அரசு மானியங்களை பெற்றுத் தருவதிலும் உதவுதல்



- தொழில்முனைவோர் தங்களது தயாரிப்புகளை சந்தைப் படுத்துவதற்கான அனைத்து விதமான உதவிகளையும் செய்து, தேவையான சந்தைத் தொடர்புகளை உருவாக்கித் தருதல்
- பள்ளி, கல்லூரி மாணவர்களைத் ஊக்கப்படுத்தி, தொழில் முனைவோர் ஆவதில் உள்ள பலன்களையும், வாய்ப்புக்களையும் அறியச் செய்து அவர்களை உற்சாகப்படுத்துவதுடன் அதற்கான பயிற்சிகளையும் அளித்தல்

மேற்கூறிய குறிக்கோள்களுக்காக உருவாக்கப்பட்டுள்ள வனவேளாண்மை தொழில்முனைவோர் ஊக்குவிப்பு மையம் சீரிய கட்டமைப்புகளைக் கொண்டுள்ளது. ரூபாய் இரண்டு கோடிக்கும் அதிகமான செலவில் உருவாக்கப்பட்டுள்ள இந்த மையம், உறுப்பினர்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் சிறப்பாக வடிவமைக்கப் பட்டுள்ளது.

தொழில்முனைவோர் ஆவதற்கு ஆர்வமுள்ளவர்களும், தொழில் நிறுவனங்களும், உழவர் கூட்டமைப்புகளும், தன்னார்வ தொண்டு நிறுவனங்களும், புதிய உதவிக்குழுக்களும், மாணவர்களும் இம்மையத்தில் உறுப்பினர்களாக இணைந்துள்ளனர்.

இதுவரை இம்மையத்தில் 35 தொழில்முனைவோர் பதிவு செய்துள்ளனர். மேட்டுப்பாளையம் வனவேளாண்மை தொழில்முனைவோர் ஊக்குவிப்பு மையத்தின் மூலமாக தகுந்த பயிற்சிகள் பெற்று திண்டிவனத்தில் K3 நர்சரி என்ற பெயரில் நாற்றுப் பண்ணையைத் துவங்கியுள்ள திரு. கார்த்திகேயன், முதலாம் ஆண்டிலேயே ரூ.12 லட்சத்துக்கும் அதிகமாக வருவாய் ஈட்டியுள்ளார். தற்சமயம் அவரது நிறுவனத்தின் பெயரில் இணையதளம், முகநூல் பக்கம் முதலானவை துவங்கப்பட்டு தொழிலை மேலும் விரிவாக்குவதற்கான பணிகள் இந்த ஊக்குவிப்பு மையத்தின் வாயிலாக நடைபெற்று வருகின்றன.

இதே போன்று அன்னூரைச் சேர்ந்த திரு ஆர். கணேசன் இந்த மையத்தின் மூலம் முறையான பயிற்சிகள் பெற்று தற்சமயம் AARGEE AROMATICS என்ற பெயரில் ஒரு நிறுவனத்தைத் துவங்கியுள்ளார். இதில் முதற்கட்டமாக கறிவேப்பிலையில் இருந்து ஸ்டீம் (steam) டிஸ்ட்டிலேஷன் முறையில் இலையிலுள்ள முக்கிய எண்ணெய்கள் பிரித்தெடுக்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்ட பின் முறையாக குப்பிகளில் அடைக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட இருக்கிறது. இதற்கான திட்ட வரைவு அறிக்கை தயார் செய்யப்பட்டு கடனுதவிக்காக வங்கியில் சமர்ப்பிக்க உள்ளது. மாவட்டத் தொழில் மையத்தில் செயல்படுத்தப்படும் MSME அமைச்சகத்தின் SEEDS திட்டத்தின் மூலமாக மானியம் பெறுவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அடுத்தக் கட்டமாக வெட்டிவேர், மல்லிகை, சம்பங்கி போன்றவற்றிலிருந்தும் முக்கிய எண்ணெய்கள் பிரித்தெடுக்கப்பட்டு சந்தைப்படுத்தபடவுள்ளன. அதிக வருவாய் ஈட்டுவதற்கான வாய்ப்புள்ள இத்தொழிலை நிறுவிக் கொடுத்ததில் இம்மையம் முக்கியப் பங்காற்றியுள்ளது. இணையவழி சந்தைப்படுத்துதல் மூலமாக மேற்கூறிய எண்ணெய் வகைகளை நேரடியாக சந்தைப் படுத்துவதற்கான ஆலோசனைகளும் வழங்கப்பட்டுகின்றன.

## தொடர்புக்கு


**முதன்மை செயல் அலுவலர்**

**வன வேளாண்மை தொழில் முனைவோர் ஊக்குவிப்பு மையம்**

**வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்**

**மேட்டுப்பாளையம் - 641 301**

**தொலைபேசி : 04254 - 222010**

**மின்னஞ்சல் : agroforestrybif@gmail.com**

# பல்கலைக்கழக புதுமை புனைவுக் குழுமம்

**முனைவர் சு. மோகன்குமார்**

தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்ப மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003, அலைபேசி : 99432 19077

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்ப மையத்தில் பல்கலைக்கழக புதுமை புனைவுக் குழுமம் (University Innovation Cluster - UIC) 2014 முதல் இயங்கி வருகிறது. மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறையின் அங்கமான பயோடெக்னாலஜி இண்டஸ்ட்ரி ரிசர்ச் அசிஸ்டன்ஸ் கவுன்சில்லின் (Bio - Technology Research Assistance Council - BIRAC) நிதி உதவியுடன் இப்பல்கலைக்கழக புதுமை புனைவுக் குழுமம் இயங்கி வருகிறது. இக்குழுமம் புதிய தொழில் முனைவு சிந்தனையுடையோருக்கும், உயிர் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கும் இடையே தொடர்பை ஏற்படுத்தி அதன் மூலம் புதிய தொழில் தொடங்க வழிவகை செய்கிறது. இக்குழுமத்தின் பயன்பாட்டிற்கென்று சுமார் 2,700 சதுரடியில் பல்வேறு உள்கட்டமைப்புகளைக் கொண்டு ஆராய்ச்சிக்கூடம் உருவாக்கப்பட்டுள்ளது. இளம் பட்டதாரிகளின் புதிய தொழில்முனைவு சிந்தனைகளை கல்வி மற்றும் தொழில் நிறுவனங்களின் கூட்டு முயற்சியுடன் வணிகமாக்கத் தேவையான சேவைகளை அளிப்பதே இந்த மையத்தின் முக்கிய நோக்கமாகும். இக்குழுமம் முதுநிலை பட்டதாரிகள் மற்றும் முனைவர் பட்டம் பெற்றவர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம், தொழில்முனைவோர் மேம்பாட்டு பயிற்சி நிறுவனங்கள் பற்றிய விழிப்புணர்வு மற்றும் மாணவர்களின் புதிய தொழில் முனைவு சிந்தனைகளை தூண்டும் நிகழ்ச்சிகள் நடத்துவது போன்றவற்றை முக்கிய செயல்பாடுகளாகக் கொண்டுள்ளது. இச்செயல்பாடுகளின் மூலம் மாணவர்கள் வேளாண் நிறுவனங்களின் எதிர்பார்ப்பை புரிந்து கொள்வதோடு அந்நிறுவனங்களோடு நல்ல தொடர்பையும் ஏற்படுத்திக் கொள்ள வாய்ப்பாக அமைகிறது.

புதிய தொழில்முனைவு சிந்தனையாளார்கள், பட்டதாரிகள், மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் தொழில்முனைவோர் இக்குழுமத்தின் பயனாளிகள் ஆவர். முதல் கட்டமாக புதிய சிந்தனையுடன் இம்மையத்தை அணுகிய இரண்டு பட்டதாரிகளுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு, இதன் மூலம் புதிய தொழில் நிறுவனங்கள் துவங்கப்பட்டுள்ளது. இந்நிறுவனங்களுக்கு அறிவு சார் சொத்துரிமையும் பெறப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டமாக

இக்குழுமத்திலிருந்து முனைவர் ஆர். நாகநாத சுகந்தன் புதிய தொழில் நிறுவனம் தொடங்குவதற்காக இந்திய அரசிடமிருந்து ரூபாய் 49.10 இலட்சம் மானியம் பெற்றுள்ளார். இவர் பயோசைன்ஸ் பிரைவேட் லிமிடெட் என்னும் நிறுவனத்தை துவங்கியுள்ளார். இந்த நிறுவனத்தின் மூலம் தாவரத்தைத் தாக்கும் நுண்ணுயிரியை ஆரம்ப நிலையிலேயே கண்டறியும் கருவியை விவசாயிகளுக்காக கண்டுபிடித்துள்ளார். இரண்டு அறிவு சார் சொத்துக்கள் (Intellectual Properties) இக்குழுமத்தில் முதல் கட்டத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த அறிவு சார் சொத்துக்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மூலம் வணிகமயமாக்கப்படும்.




மூன்று பட்டதாரிகளுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. உதவித்தொகை மட்டுமன்றி இக் குழுமத்தின் வாயிலாக வேளாண் மாணவர்களை புதிய கண்டுபிடிப்பாளர்களாக்கவும், தொழில் முனைவோர்களாக உருவாக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பல்வேறு செயல்முறை பயிற்சிகள் மற்றும் வேளாண்மையில் புதிய கண்டுபிடிப்புக்களுக்கான போட்டிகள் மாணவர்களுக்காக நடத்தப்பட்டு வருகிறது. தொழில் நிறுவனங்களும், முதலீட்டாளர்களும் இதுபோன்ற பயிற்சிகளை வழங்குகின்றனர். தேசிய அளவிலான வேளாண் வணிகத்திட்டம் வரைதல் மற்றும் புதிய கண்டுபிடிப்புக்கான போட்டிகளில் வேளாண் மாணவர்கள் கலந்து கொள்ள ஊக்குவிக்கப்பட்டு வருகிறார்கள். இதன் விளைவாக மாணவர்கள் சிலர் புதிய வேளாண் நிறுவனங்களை தொடங்கி உள்ளனர்.

அண்மையில் பல்கலைக்கழக புதுமைக் குழுமம் (E-YUVA) என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்தப் புதிய பரிமாணத்தில் வணிக ரீதியான ஆராய்ச்சிகளுக்கு கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இப்புதிய திட்டத்தின் மூலம் ஆண்டிற்கு 25 மாணவர்களுக்கு புதிய கண்டுபிடிப்புக்களுக்கான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுவதற்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | நிதி நிறுவனம் | மாநில/ மத்திய அரசு | நிதி | பயனாளிகள் |
|---|---|---|---|---|---|
| 1. | புதுமை புனைவுக்கான திட்டம் | தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் (Entrepreneurship Development & Innovation Institution) | மாநில அரசு | ரூ.5 இலட்சம் | ஆரம்ப நிலை தொழில் முனைவோர்கள் மற்றும் சிறு குறு தொழில் நிறுவனங்கள் |
| 2. | தமிழ்நாடு மாணவ கண்டுபிடிப்பாளர்கள் | தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் | மாநில அரசு | ரூ.5 இலட்சம் | அனைத்து பல்கலைக்கழக மாணவர்கள் |
| 3. | உயிரியல் தொழில்நுட்பவியல் தொழில் முனைவோர் மானியம் | பயோ டெக்னாலஜி இண்டஸ்ட்ரி ரிசர்ச் அசிஸ்டன்ஸ் கவுன்சில் (Bio -Technology Research Assistance Council -BIRAC) | மத்திய அரசு | ரூ .50 இலட்சம் | ஆரம்ப நிலையில் உள்ள தொழில் முனைவோர்கள் |
| 4. | டெக்கோப்ரோனர் புரொமோஷன் புரொகிராம் | அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் துறை (Department of Science & Technology - DST) | மத்திய அரசு | ரூ.1 கோடி | சிறு மற்றும் குறு தொழில் நிறுவனங்கள் மற்றும் ஆரம்பநிலை தொழில் நிறுவனங்கள் |
| 5. | தொழில் முனைவோர்களுக்கான முதன் முதலீடு | வேளாண் மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம் (Ministry of Agriculture & Farmer Welfare) | மத்திய அரசு | ரூ. 25 இலட்சம் | ஆரம்ப நிலையில் உள்ள தொழில் நிறுவனங்கள் |


**தொடர்புக்கு**

**இயக்குநர்**
**பல்கலைக்கழக புதுமை புனைவுக் குழுமம்**
**தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்ப மையம்**
**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**கோயம்புத்தூர் – 641 003**
**தொலைபேசி : 0422 - 6611462**
**மின்னஞ்சல் : directorcpmb@tnau.ac.in**

# திறன் மேம்பாட்டு மையம் – ஓர் பார்வை

முனைவர் ச. தம்பிதுரை, முனைவர் சே. சு. சிவக்குமார்
முனைவர் வெ. திருப்பதி

பண்ணை இயந்திரவியல் மற்றும் ஆற்றல் பொறியியல் துறை
வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்
குமுளூர் – 621 712. அலைபேசி : 80720 05696

கடந்த 15 ஆண்டுகளாக பல்வேறு துறைகளின் முன்னேற்றத்தில் திறன் மேம்பாடு முக்கிய காரணியாக கருதப்படுகிறது. இது போன்று வேளாண்மை தொழிலிலும் திறன் மேம்பாட்டை அடையச் செய்வது முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். கிராமப்புற இளைஞர்கள் வேலைவாய்பிற்காக நகர்ப்புறம் நோக்கி செல்வதால் வேளாண்மைக்குத் தேவையான திறமையானவர்கள் குறைவாக உள்ளனர். கிராமப்புற இளைஞர்களை திறன் மேம்பாடு அடைய செய்வதன் மூலம் கிராமப் புறங்களிலேயே வேலை வாய்ப்பும், உணவு உற்பத்தியில் தன்னிறைவும் பெற வாய்ப்பு உண்டாகும். மேலும், அவர்களுக்கு வேளாண்மை ஒரு பணிக்கூடமாக அமையும். தற்போது மற்ற துறைகளில் திறன் மேம்பாடு பெற்ற இளைஞர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகும். ஆனால், நகர்ப்புறங்களைக் காட்டிலும் கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பற்ற படித்த இளைஞர்களின் எண்ணிக்கை அதிகமாகும். பல்கலைக் கழகங்களில் இருந்து பட்டம் பெற்று வெளிவரக்கூடிய இளைஞர்களுக்குக் கூடுதல் அறிவுத்திறன் குறைவாக காணப்படுகிறது. ஆனால், நவீன வேளாண்மையில் தொழில்நுட்பங்களை நடைமுறைப்படுத்துவதற்கும், கருவிகள் மற்றும் இயந்திரங்களை இயக்குவதற்கும், பராமரிப்பதற்கும், பழுது நீக்குவதற்கும் தேவையான தொழில்நுட்பத் திறன் பெற்றவர்களின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டிய கட்டாய சூழலில் உள்ளோம்.

இத்தகைய சூழலில், குமுளூரிலுள்ள வேளாண்மை பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், திறன் மேம்பாட்டு மையம் செயல்பட்டு வருகிறது. இதன் முக்கிய குறிக்கோள்கள் மற்றும் செயல்பாடுகள் பின்வருமாறு:

## குறிக்கோள்கள்

- ❖ வேளாண்மையில் உற்பத்தித் திறனை அதிகரிக்க இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டை பெறசெய்தல்
- ❖ நவீன தொழில்நுட்பங்களையும், இயந்திரங்களையும் நடைமுறைப்படுத்த நிறுவனங்களிடையே ஒருங்கிணைப்பை உருவாக்குதல்

- பொருளாதார ரீதியாக பின் தங்கியுள்ள கிராமப்புற இளைஞர்களுக்கு இயந்திரமய வேளாண்மையில் திறன் மேம்பாடு அளிப்பதன் மூலம் வேலை வாய்ப்பை அதிகரித்தல்
- சுய வேலைவாய்ப்பை அதிகரிப்பதன் மூலம் கிராமப்புற இளைஞர்கள் நகர்ப்புறம் நோக்கி செல்வதைக் குறைத்தல்



- மதிப்புக்கூட்டுதல் தொழில்நுட்பத்தின் மூலம் தொடர்ச்சியான மாற்று வருமானத்தையும், வேலைவாய்ப்பையும் உருவாக்குதல்

## செயல்பாடுகள்

பின்வரும் தலைப்புகளில் கிராமப்புற இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு மையத்தில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

சந்தை சார்ந்த வேளாண் விதை உற்பத்தி, வேளாண் இயந்திரங்கள், நாற்றங்கால் தொழில்நுட்பம், நுண்நீர் பாசன தொழில்நுட்பம் மற்றும் வேளாண் சந்தைப்படுத்துதல் ஆகியவை முக்கிய செயல்முறைப் பாடத்திட்டங்களாக வகுக்கப்பட்டுள்ளன.

இப்பாடத்திட்டங்களில் திறன் மேம்பாடு அடைய தேவையான குழி நாற்றாங்கால்

| பிரிவுகள் | பயிற்சி தலைப்பு |
|---|---|
| 1. | வேளாண்மைக் கருவிகள் |
| 2. | இஞ்சின்கள் பழுது நீக்குதல் மற்றும் பராமரிப்பு, டிராக்டர்களில் பழுது நீக்குதல் மற்றும் பராமரிப்பு, ஹைட்ராலிக் சிஸ்டம் பழுது நீக்குதல் |
| 3. | டிராக்டர் ஓட்டுதல் மற்றும் அதன் உபகரணங்கள் பராமரிப்பு |
| 4. | குழி நாற்றங்கால் தயாரிப்பு, சான்று பெற்ற விதை உற்பத்தி, நவீன நாற்றங்கால் உற்பத்தி தொழில்நுட்பங்கள் |
| 5. | நுண்ணூட்டச்சத்து தயாரித்தல் |
| 6. | மின்சாதன உபகரணங்கள் பழுது நீக்குதல் மற்றும் பராமரிப்பு |
| 7. | நீர்பாசன கருவிகள் பழுது நீக்குதல் மற்றும் பராமரிப்பு |

| | |
|---|---|
| 8. | டீசல் பம்புசெட் மற்றும் நுண்ணுயிர் பாசன உபகரணங்கள் பழுது நீக்குதல் மற்றும் பராமரிப்பு |
| 9. | அறுவடை இயந்திரம் மற்றும் வைக்கோல் கட்டும் இயந்திரத்தில் பழுது நீக்குதல் மற்றும் பராமரிப்பு |
| 10. | விதை விதைக்கும் கருவி, நாற்று நடும் இயந்திரம், களையெடுக்கும் கருவி மற்றும் தெளிப்பான்களில் பழுது நீக்குதல் மற்றும் பராமரிப்பு |
| 11. | பவர்டில்லர் ஓட்டுதல் மற்றும் அதன் உபகரணங்கள் பராமரிப்பு |
| 12. | அறிவுத்திறன் மேம்படுத்துதல் சுற்றுலா |

தயாரிப்பு, சான்று பெற்ற விதை உற்பத்தி, நவீன நாற்றாங்கால் உற்பத்தி, நுண்ணூட்டச்சத்து தயாரித்தல், டிராக்டர், மின் சாதன உபகரணங்கள், இஞ்சின்கள், நீர்பாசன கருவிகள், அறுவடை இயந்திரம், வைக்கோல் கட்டும் கருவி, விதையிடும் இயந்திரம், நடவு இயந்திரம், களையெடுக்கும் இயந்திரம், தெளிப்பான் இயந்திரம் ஆகியவற்றில் பழுது நீக்குதல் மற்றும் பராமரிப்பு இதனுடன் ஓட்டுநர் பயிற்சியும் இலவசமாக அளிக்கப்படுகிறது.

## எதிர்நோக்கும் பயன்கள்

- ❖ வேளாண் உற்பத்தியை பெருக்குவதன் மூலம் சுமார் 8 முதல் 10 சதவிகிதம் வளர்ச்சி சாத்தியப்படுத்தப்படும்
- ❖ ஊரக இளைஞர்கள் வேளாண்மை துறையிலேயே தங்க வைக்கப்படுவார்கள் மற்றும் நகரை நோக்கி செல்வது தடுக்கப்படும்
- ❖ வேளாண்மைத் துறையில் முழுமையான இரண்டாம் பசுமை புரட்சியை ஏற்படுத்த உதவும்
- ❖ தொடர்ச்சியான மாற்று வருமானமும் வேலைவாய்ப்பும் உருவாக்குதல்
- ❖ வேளாண்மையில் நிலையான உற்பத்தியை அடைவதன் மூலமும், உற்பத்தி செலவைக் குறைத்து மதிப்புக்கூட்டுதல் மூலமும் இலாபம் உயர்த்தப்படும்

### தொடர்புக்கு


முதன்மை செயல் அலுவலர்
திறன் மேம்பாட்டு மையம்
பண்ணை இயந்திரவியல் மற்றும்
ஆற்றல் பொறியியல் துறை
வேளாண் பொறியியல் கல்லூரி
மற்றும் ஆராய்ச்சி நிலையம்
குமுளூர்-621 712
தொலைபேசி : 0431-2545000
மின்னஞ்சல் : deancaekum@tnau.ac.in.

# தொழில்நுட்ப வேளாண் வணிக காப்பகம் (TBI) மூலம் தொழில் தொடங்கிய வெற்றியாளருடன் கலந்துரையாடல்

**முனைவர் மா. மலர்கொடி, முனைவர் சே. தே. சிவகுமார்**
வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் -641 003
அலைபேசி : 63802 57553

சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும் என்பதற்கிணங்க, திட்டம் சிறக்க வேண்டுமாயின் அதில் நுட்பம் வேண்டும். இதன் தாக்கம் தொழில்துறையிலும் உண்டு. இதை உணர்த்தும் வகையில் கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், வேளாண் தொழில் முனைவோருக்கு தூண்டுகோலாய் இருந்து வருகிறது.

புதிதாக தொழில் துவங்குவோருக்கு தொழில்நுட்ப வேளாண் வணிக காப்பகம் (Technology Bussiness Incubator - TBI) பல்வேறு சேவைகளை அளித்து வருகிறது. அதிலும் குறிப்பாக, வங்கி மூலம் பண உதவி பெறும்முறை, சந்தைப்படுத்துதல், தரக்கட்டுப்பாட்டு சான்றிதழ் மற்றும் உரிமம் பெறுதல், வேலை வாய்ப்பை உருவாக்குதல் போன்ற பல்வேறு சேவைகளை 2007 லிருந்து வெற்றிகரமாக செய்து வருகிறது. இன்று பல்வேறு பிரிவுகளின் கீழ் பெரும்பாலானோர் TBI யின் சேவைகளை பெற்று, தங்களின் முயற்சியாலும், TBI யின் உறுதுணையாலும் அவரவர் தொழில்களில் வெற்றியாளராக திகழ்ந்து வருகின்றனர்.

அவர்களில் ஒருவரான சுதர்சன், மிவி புரோ ப்ராடக்ட் பிரைவேட் லிமிடெட் (Mivi Pro Product Private Ltd.,) அவர்களிடம் TBI - ன் சேவையை பற்றி அறிய வேளாண் மாணவிகளோடு நடந்த கலந்துரையாடலைப் பற்றி காண்போம்.

**வீணா :** உங்களின் வணிக நோக்கம் எதைச் சார்ந்தது?

**சுதர்சன்:** என்னுடைய வணிக நோக்கம் "உயிர் விலக்கிகள்"(Bio Repellent) அதாவது வேளாண்மைத் துறையைச் சார்ந்தது. இதை நான் மிவி புரோ ப்ராடக்ட் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தின் கீழ் தயாரித்து, விற்பனை செய்து வருகிறேன்.

**விமலா :** உங்களுக்கு TBI ன் அறிமுகம் எப்படி கிடைத்தது?

**சுதர்சன்:** நான் ஜார்கண்டில் உள்ள தொழில்முனைவோர் சங்கத்தின் மூலம் அரசு திட்டத்தின் கீழ் தொழில் ஒன்றினை தொடங்க முயற்சி செய்த போது, அங்குள்ள அதிகாரிகள் கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககத்தில் இயங்கி வரும் TBI சிறந்த வழிகாட்டியாக இருக்கும் என்று அறிமுகம் செய்து வைத்தனர்.

வஹிதா: நீங்கள் TBI லிருந்து எவ்விதமான சேவைகளை எதிர்பார்த்தீர்கள்?

சுதர்சன்: நான் TBI லிருந்து குறைந்த முதலீட்டில் அதிக இலாபம் அடைவதற்கு இதன் சேவைகள் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்த்தேன்.

வீணா: நீங்கள் எதிர்பார்த்த சேவைகளை TBI உங்களுக்கு அளித்ததா?

சுதர்சன்: ஆம். நான் எதிர்பார்த்த சேவைகளை விட TBI பல ஆலோசனைகளை வழங்கியது.

விமலா: அவை என்னென்ன சேவைகள்?

சுதர்சன்:

- ❖ வங்கி நிதியுதவி பெறும் வழிமுறைகளை தெளிவுப்படுத்தியது
- ❖ விளைபொருள் தயாரிப்பு சோதனைகளுக்கு உதவியது
- ❖ தரக்கட்டுப்பாட்டுச் சான்றிதழ் பெற்றுத் தந்தது
- ❖ காப்புரிமை பெற உதவியது
- ❖ விளைபொருளை சந்தைப்படுத்த உதவியது
- ❖ மற்ற நிறுவனங்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள உதவியாக இருந்தது. இது போன்ற பல சேவைகளை வழங்கியது.

வஹிதா: நீங்கள் TBI ல் பெற்ற ஆலோசனைகள் உங்களின் வணிக முன்னேற்றத்திற்கு உதவியாக இருந்ததா?

சுதர்சன்: TBI ன் சேவைகள் வணிக முன்னேற்றம் மற்றும் வெற்றிக்கு மிகவும் உதவியாக இருந்தது.

- ❖ உதாரணமாக - AGRI INTEX போன்ற கருத்துக் காட்சிகளில் எங்கள் பொருட்களை விளம்பரப்படுத்த உதவியது.
- ❖ நிதி நிறுவனங்களுடனான சந்திப்பை உருவாக்கி நிதியுதவி பெற வழிவகை செய்தது.
- ❖ ஊடகங்கள் வாயிலாக மிவி புரோ பற்றிய விளம்பரங்களை செய்ய உதவியது. இது போன்ற சேவைகள் மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

வீணா: TBI ல் உறுப்பினராக கட்டணம் ஏதேனும் செலுத்தி உள்ளீர்களா?

சுதர்சன்: ஆம், கட்டணம் செலுத்த வேண்டும். அவரவர் வணிக அமைப்பு முறையைப் பொறுத்து கட்டணம் செலுத்தவேண்டும்.

விமலா: TBI ன் சேவைகள் உங்களின் வணிகத்தில் இலாபம் ஈட்ட உதவியாக இருந்ததா?

சுதர்சன்: ஆம், குறைந்த முதலீட்டில் வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் மூலம் மிவி புரோ பொருளின் திறனை கண்டறியும் திட்டத்தை மேற்கொண்டு, பொருளின் திறனை உறுதி செய்ய மிகவும் உறுதுணையாக விளங்கியது. இதன் மூலம் குறைந்த செலவில் அதிக லாபம் ஈட்டினேன்.

வஹிதா: TBI பற்றிய விவரங்களை யாருக்கேனும் பகிர்ந்துள்ளீர்களா?

சுதர்சன்: நான் TBI பற்றிய விவரங்களை அதிக நபர்களுடன் பகிர்ந்து உள்ளேன். அவர்களும் இங்கே உறுப்பினர்களாகச் சேர்ந்து உணவுப் பொருள்,

சிறுதானியங்கள் மதிப்புக் கூட்டல், வாழையிலிருந்து வீட்டு உபயோகப் பொருட்கள், பேக் செய்த இளநீர் போன்றவற்றில் TBI ன் உதவியால் தொழில் தொடங்கியுள்ளார்கள்.

வீணா: நீங்கள் TBI ல் ஏதேனும் பிரச்சனைகளை சந்தித்தர்களா? உங்களுக்கும் அங்குள்ள அதிகாரிகளுக்குமிடையே உறவு எவ்வாறு இருந்தது?

சுதர்சன்: நான் எந்த ஒரு பிரச்சனையும் சந்திக்க வில்லை. ஏனெனில், TBI ன் அதிகாரிகளுக்கும் எனக்குமிடையே பரஸ்பர உறவு நிலவியது. எங்களின் சந்தேகங்களை உடனுக்குடன் பொறுமையாகவும் தெளிவாகவும் விளக்கினார்கள்.

விமலா: TBI ல் கிடைத்த நிதியுதவி பயனுள்ளதாக இருந்ததா?

சுதர்சன்: TBI ன் மூலம் உரிய நேரத்தில் நிதியுதவி கிடைத்தது. எப்படியெனில், சில வங்கிகளும் TBI ல் உறுப்பினர்களாக இருந்ததே காரணம். ஏறத்தாழ ஐந்து கோடி வரை நிதியுதவி TBI ன் பரிந்துரையின் பேரில் பல்வேறு திட்டங்களின் கீழ் பெற்றேன். அந்நிதியை தொழில் வளர்ச்சி மற்றும் விரிவாக்கத்திற்காகவும், சந்தைப்படுத்துவதற்காகவும் பயன்படுத்தினேன்.

வஹிதா: TBI உங்களின் வணிக நோக்கத்தை தேர்வு செய்ததற்கான காரணம் என்ன?

சுதர்சன்: எனது வணிக பொருள் புதிய கண்டுபிடிப்பாகவும், சுற்றுச்சூழலை சீராக்கும் வகையிலும், தற்போதைய மக்களுக்கு தேவையானதாகவும் இருந்ததால் தேர்வு செய்தனர்.

வீணா: வேறு ஏதேனும் சேவை மையத்தில் நீங்கள் உறுப்பினராக இருந்திருந்தால் உங்கள் வணிகம் இவ்வளவு முன்னேற்றம் அடைந்திருக்கும் என்று நினைக்கிறீர்களா?

சுதர்சன்: கண்டிப்பாக இல்லை.

விமலா: TBI பற்றிய விழிப்புணர்வு மக்கிடையே எவ்வாறு உள்ளது.

சுதர்சன்: தொழில்முனைவோருக்கு TBI பற்றிய விழிப்புணர்வு கண்டிப்பாக இருக்கின்றது. ஆனால், பொதுமக்களிடையே இது முழுமையாக சென்றடைய வில்லை என்பது என்னுடைய கருத்து.

வஹிதா: உங்களின் விளை பொருளுக்கு விலையை எவ்வாறு நிர்ணயம் செய்தீர்கள்?

சுதர்சன்: விளைபொருளின் மதிப்பை பொறுத்து விலையை நிர்ணயம் செய்தோம். இந்த விலை இலாபம் ஈட்டுவதாகவும், குறைந்த விலையாகவும் இருக்குமாறு நிர்ணயம் செய்தோம்.

இந்தக் கலந்துரையாடல், வேளாண் வணிக இயக்குனரகத்தின் கீழ் இயங்கும் TBI ன் சேவைகளைப் பற்றி மாணவிகள் தெளிவாக அறிந்துக் கொள்ள வாய்ப்பாக அமைந்தது.

# தனியார் விதை உற்பத்தியாளர் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப கூட்டமைப்பு

**முனைவர் பொ. செல்வராசு**
வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் – 641 003. அலைபேசி : 9578691521

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஆராய்ச்சிகள் மூலம் பல உயர் விளைச்சல் இரகங்கள் மற்றும் வீரிய ஒட்டு இரகங்களை வேளாண்மைப் பயிர்களிலும், தோட்டக்கலைப் பயிர்களிலும் வெளியிட்டுள்ளது. அவ்வாறு வெளியிடப்பட்டுள்ள இரகங்கள் மற்றும் வீரிய ஒட்டுக்கள் தமிழ்நாட்டில் மட்டுமன்றி இந்திய அளவில் வேறு மாநிலங்களிலும் பயிரிடப்பட்டு விவசாயிகளுக்கு அதிக விளைச்சலையும், வருமானத்தையும் கொடுத்து வருகின்றன. இந்த இரகங்கள் விவசாயிகளிடமும் விரைவாக சென்றடைவதற்காக, பொது மற்றும் தனியார் விதை உற்பத்தி நிறுவனங்களை உறுப்பினர்களாகக் கொண்டு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் - தனியார் விதை உற்பத்தியாளர் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப கூட்டமைப்பை ஏற்படுத்தி உள்ளது.

தற்போது இந்தக் கூட்டமைப்பில் 28 தனியார் நிறுவனங்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இந்த கூட்டமைப்பில் உறுப்பினராக உள்ள நிறுவனங்கள் கீழ்க்காணும் பயன்களைப் பெறுகின்றன.

❖ வீரிய ஒட்டு இரகத்தின் தாயாதி விதைகளைப் பெற்று விதை பெருக்கம் செய்து விவசாயிகளுக்கு விற்றுப் பயன் பெறலாம். இதற்காக ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்தி உரிமம் பெற்று குறிப்பிட்ட காலம் வரை தாயாதி விதைகளைப் பெற்று வீரிய ஒட்டு இரக விதை பெருக்கம் செய்யலாம். உரிமத் தொகையோடு, ஒவ்வொரு வருடமும் விற்பனை செய்யும் விதை மதிப்பில் குறிப்பிட்ட சதவிகிதம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு Royalty செலுத்த வேண்டும்.

❖ இதேபோல், தனியார் நிறுவனங்கள் உருவாக்கும் வீரிய ஒட்டு இரகங்களை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வாயிலாக பல இடங்களில் பயிரிட்டு அதன் விளைச்சல் திறனை தெரிந்து கொள்ளலாம். இதற்காக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்த வேண்டும்.

❖ வீரிய ஒட்டு இரகங்களை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலிருந்து பெற்று தேவையான பகுதிகளில் அந்த வீரிய ஒட்டு இரகங்களை பயிர் செய்து விளைச்சல் திறனை அறிந்து கொள்ளலாம்.

❖ வீரிய ஒட்டு இரக உற்பத்தி முறையைத் தெரிந்து கொள்ள ஆலோசனை முறையில் அதற்குரிய

கட்டணத்தை செலுத்தி தெரிந்து கொள்ளலாம்.

### கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள்

❖ உறுப்பினராக சேர்ந்தபின், வீரிய ஒட்டு இரகத்திற்கு உண்டான உரிமத் தொகையை செலுத்தி, புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளவேண்டும். பின் தாயாதி விதைகளைப் பெற்று வீரிய ஒட்டு இரக விதை உற்பத்தி மேற்கொள்ளலாம்.

❖ விதை உரிமம் பெற்ற ஒரு நிறுவனம் அதை வேறு நிறுவனத்திற்கு மாற்றவோ, உரிமம் தரவோ முடியாது.

❖ விதை உரிமம் பெற்ற நிறுவனம் வாங்கிய வீரிய ஒட்டு இரக தாயாதி விதைகள் மூலம் வேறு இரகம் அல்லது ஒட்டு இரகம் உருவாக்கக் கூடாது.

❖ விதை உரிமம் பெற்ற ஒரு நிறுவனம் தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் பெயரிடப்பட்ட பெயரிலேயே விதை விற்பனை செய்ய வேண்டும்.

### இந்த கூட்டமைப்பு மூலமாக இதுவரை கீழ்க்காணும் ஒட்டு இரகங்கள் வணிகமுறைப் படுத்தப்பட்டுள்ளன

❖ நெல் ஒட்டு இரகம் - கோ. ஆர். எச் 3 (CORH 3) மற்றும் கோ. ஆர். எச் 4 (CORH 4)

❖ மக்காச்சோளம் ஒட்டு இரகம் கோ. எச் எம் 7, கோ. எச் எம் 8, கோ. எச் எம் 9 (COH(M)7, COH(M)8, COH(M)9)

❖ வெண்டை ஒட்டு இரகம் - கோ. பி. எச் 1 (COBH 1)

### கீழ்க்காணும் ஒட்டு இரகங்கள் வணிக முறைப்படுத்த தயாராக உள்ளன

❖ நெல் ஒட்டு இரகம் - கோ. ஆர். எச் 3, கோ. ஆர். எச் 4 (CORH3 & CORH 4)

❖ மக்காச்சோளம் ஒட்டு இரகம்- கோ. எச். எம் 7, கோ. எச். எம் 8, கோ. எச். எம் 9 (COH(M) 7,8,9

❖ சோளம் ஒட்டு இரகம் - கோ 5 (CO 5)

❖ கம்பு ஒட்டு இரகம் - கோ 9 (CO 9)

❖ சூரியகாந்தி ஒட்டு இரகம் - கோ (எஸ். எப். எச்.) 2 (CO (SFH)2)

❖ சூரியகாந்தி ஒட்டு இரகம் - கோ. எச் 3 (COH 3)

❖ ஆமணக்கு ஒட்டு இரகம் - ஒய் ஆர் சி ஹச் 1 (YRCH 1) மற்றும் ஒய் ஆர் சி ஹச் 2 (YRCH 2)

❖ தக்காளி ஒட்டு இரகம் - கோ 3 (CO 3)

❖ வெண்டை ஒட்டு இரகம் - கோ 4 (CO 4)

❖ சுரைக்காய் ஒட்டு இரகம் - கோ 1 (CO 1)

❖ வீரிய ஒட்டு புடல் - கோ.எச் 1 (COH1)

மேலே குறிப்பிடப்பட்ட ஒட்டு இரகங்களை வயல்வெளி செயல் விளக்கங்கள் மூலம் நாட்டின் பல்வேறு மாநிலங்களில் இருந்து வந்த

| வ.எண் | பயிர் | ஒட்டு இரகம் | உரிமம் பெற்ற நிறுவனங்கள் எண்ணிக்கை | ஒட்டு இரகம் உருவாக்கிய துறை |
|---|---|---|---|---|
| 1. | நெல் | கோ. ஆர். எச் 3<br>கோ. ஆர். எச் 4 | 2<br>3 | நெல் துறை கோவை |
| 2. | மக்காச்சோளம் | கோ. எச் எம் 7<br>கோ. எச் எம் 8<br>கோ. எச் எம் 9 | 1<br>3<br>1 | தானியப்பயிர்கள் துறை, கோவை |
| 3. | வெண்டை | கோ. பி. எச் 1 | 1 | காய்கறிப்பயிர்கள் துறை, கோவை |

தனியார் மற்றும் அரசு சார்ந்த விதை உற்பத்தியாளர்களுக்கு வயல்விழாவாக 01.10.2019 அன்று நடத்தப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்தக் கூட்டமைப்பில் உறுப்பினர்களாக சேருவதற்கு ரூ.1,00,000 (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) சந்தாவாக ஒரு முறை செலுத்த வேண்டும். ஒரு நிறுவனம் உறுப்பினராவதற்கு செலுத்திய தொகையை வேறு நிறுவனத்திற்கு மாறுதல் செய்ய முடியாது.

எனவே, ஆர்வமுள்ள விதை நிறுவனங்கள் இக்கூட்டமைப்பில் உறுப்பினராகி வீரிய ஒட்டு இரகம் விதை பெருக்கம் செய்து விவசாயிகளுக்கு விற்பனை செய்வதன் மூலம் தங்களுடைய நிறுவனம் பயன் பெறுவதோடு விவசாயிகளும் பயன்பெறுவர்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக இரகங்கள் வணிகமயமாக்கல் வயல் விழா 1-10-19 அன்று நடைபெற்ற விழாப்புகைப்படங்கள்








### தொடர்புக்கு

இயக்குநர்
வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் – 641 003
தொலைபேசி எண் : 0422 – 6611310
மின்னஞ்சல் : business@tnau.ac.in


**விதை...**

- விதைகளில் மிகப்பெரிய விதை எது?
  பனை வகையை சார்ந்த (கோ கோ.டி.மர்) வகை ஆகும்.
- விதைகளில் மிகச்சிறிய விதை எது?
  ஆர்கிட் விதைகள் தான் மிகச்சிறியது.
  1 கிராம் எடையில் 1,25,000 விதைகள் அடங்கும்.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் முனைப்பு முதலீட்டுத் திட்டத்தின் செயல்பாடுகள்

*முனைவர் ம. சாந்தசீலா*
*முனைவர் சே. தே. சிவகுமார்*

வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003
அலைபேசி : 95665 30191

மக்கள் தொகைக்கு ஏற்ப உணவு தானியங்கள், காய்கறிகள், பழங்கள், பால் பொருட்கள் மற்றும் மதிப்பூட்டப்பட்ட வேளாண் விளைபொருட்கள் ஆகியவற்றின் தேவை அதிகரித்துக் கொண்டு வருகிறது. இவற்றின் உற்பத்தியை வணிக ரீதியில் அதிகரிக்க வேண்டியுள்ளது. உற்பத்தியை பெருக்குவதற்கு நவீன தொழில்நுட்பங்களை கடைப்பிடிப்பதும், தரமான இடுபொருட்களைப் பயன்படுத்துவதும் இன்றியமையாதது. இதைக் கருத்தில் கொண்டு மத்திய அரசின் முனைப்பு முதலீட்டுத் திட்டத்தின் அடிப்படையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் புதிய இரகங்கள், இடுபொருட்கள் மற்றும் தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு கொண்டு செல்வதற்காகவும் பல்கலைக்கழகத்திற்கு வருவாய் ஈட்டுவதற்காகவும் முனைப்பு முதலீட்டுத் திட்டமானது 2003 ல் ஆரம்பிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் மூலம் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்பட்டு வரும் கல்லூரிகள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்களில் தரமான இடுபொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

பிரதி அண்டு பிப்ரவரி மாதத்தில் வேளாண் கல்லூரிகள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் அந்தந்த பகுதி விவசாயிகளின் தேவைகளுக்கேற்ப இடுபொருட்கள், உற்பத்தி, பயிற்சி மற்றும் பரிசோதனைகள் செய்ய புதிய திட்ட அறிக்கை தயார் செய்து வேளாண் வணிக மேம்பாட்டு இயக்குநகரத்துக்கு சமர்ப்பிக்கின்றன.

இத்திட்ட அறிக்கையை வல்லுநர் குழு ஆய்வு செய்து, இத்திட்டம் தொழில்நுட்ப நீதியாக செயல்படுத்த முடியும் என்ற பட்சத்தில், இக்குழு பரிந்துரை செய்யும். பரிந்துரை செய்யப்பட்ட திட்ட அறிக்கைகளுக்கு முதலீட்டுத் தொகையை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வழங்கும்.

இத்திட்டத்தின் மூலம் நெல், தானிய வகைகள், பயறு வகைகள், எண்ணெய் வித்துகள், பணப்பயிர்கள் ஆகியவற்றில் வெளியிடப்படும் புதிய இரகங்களின் வல்லுநர் மற்றும் உண்மை நிலை விதைகள், கரும்பு விதைக் கரணைகள், காய்கறிகள் மற்றும் பழங்கள் போன்றவற்றில் புதிய இரகங்களின் விதைகள் மற்றும் வீரிய ஒட்டு நாற்றுகள், அலங்காரச் செடிகள், உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள், மண்புழு உரம்

வளர்ச்சி ஊக்கிகள் போன்ற இடுபொருட்கள் விவசாயிகளுக்கு வழக்கப்பட்டு வருகின்றன.

நீர் மற்றும் மண் மாதிரிகள், வேளாண் பொருட்கள் மற்றும் விளை பொருட்களில் பூச்சிக்கொல்லி, நச்சுப் பொருள் அளவு ஆகியவற்றை ஆய்வு செய்து ஆலோசனை வழங்கும் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

உழவர்கள் தொழில்முனைவோராக மாற காளான் விதை உற்பத்தி, தேனீ வளர்த்தல், உணவுப் பொருட்கள் பதப்படுத்துதல், மசாலாப் பொடிகள், பழரசங்கள், ஊறுகாய் தயாரித்தல் போன்றவற்றில் பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.



வேளாண் மாணவர்களும் இம் முனைப்பு முதலீட்டுத் திட்டத்தில் ஈடுபடுத்தப்படுவதால் அம்மாணவர்கள் தொழில் தொடங்கத் தேவையான அனைத்து நுட்பங்களையும் கற்றுக்கொள்ள வழிவகை செய்யப்படுகிறது.

2018 - 2019 ல் விதை மற்றும் நாற்றுகள், இடுபொருட்கள், உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள், வளர்ச்சி ஊக்கிகள் பற்றிய ஆய்வு மற்றும் ஆலோசனைகள் மற்றும் பயிற்சி வகுப்புகள் என்ற பிரிவுகளின் கீழ் மொத்தம் 150 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் தேவையான இடுபொருட்களை விவசாயிகள் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் ஆராய்ச்சி நிலையங்களிலிருந்து நேரடியாகப் பெற்று பயனடையலாம். உழவர்கள் தங்களுக்கு தேவைப்படும் இடுபொருட்களை உற்பத்தி செய்யப்படும் நிலையங்களில் முன்கூட்டியே பதிவு செய்து பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.



2018-19 ல் உற்பத்தி செய்யப்பட்ட சில இடுபொருட்களின் அளவுகள் பின்வருமாறும் : வேளாண் விதைகள் 418.5 டன்களும், தென்னை டானிக் 658.81 லிட்டர்களும், உயிர் உரங்கள் 59.6 டன்களும், ட்ரைகோடெர்மா 20.5 டன்களும், மண்புழு உரம் 8.3 டன்களும் உற்பத்தி செய்யப்பட்டு உழவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. கம்புநேப்பியர் புல் / கரணைகள் 17

மாநிலங்களுக்கும், நான்கு வெளி நாடுகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

இடுபொருட்களை பெறவும், உணவுப் பொருட்கள் தயாரிப்பில் பயிற்சிகள் பெறவும் அட்டவணையில் உள்ள வேளாண் கல்லூரிகள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்களை அணுகிப் பயன்பெறலாம்.

| வ. எண் | விதைகள், நாற்றுகள் மற்ற இடுபொருட்கள், ஆலோசனைகள் | தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி |
|---|---|---|
| 1. | நெல் | • வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கிள்ளிகுளம்<br>• வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை<br>• வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், குமுளூர்<br>• வேளாண் ஆராய்ச்சி நிலையம், திருப்பதிசாரம்<br>• வேளாண் ஆராய்ச்சி நிலையம், பவானிசாகர்<br>• மண்டல ஆராய்ச்சி நிலையம், பட்டுக்கோட்டை<br>• மண்டல ஆராய்ச்சி நிலையம், திரூர்<br>• மண்டல ஆராய்ச்சி நிலையம், அம்பாசமுத்திரம்<br>• காய்கறி ஆராய்ச்சி நிலையம், பாலூர்<br>• கரும்பு ஆராய்ச்சி நிலையம், மேலாலத்தூர்<br>• தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை<br>• மண் மற்றும் நீர் மேலாண்மை ஆராய்ச்சி நிலையம், காட்டுத்தோட்டம் |
| 2. | பயறு வகைகள் | • பயறு வகைகள் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்<br>• வேளாண் ஆராய்ச்சி நிலையம், பவானிசாகர்<br>• மண்டல ஆராய்ச்சி நிலையம், திரூர்<br>• காய்கறி ஆராய்ச்சி நிலையம், பாலூர்<br>• தேசிய பயறு வகைகள் ஆராய்ச்சி நிலையம், வம்பன்<br>• தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை |
| 3. | சிறுதானியங்கள் | • சிறுதானியங்கள் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்<br>• சிறுதானிய மகத்துவ மையம், அத்தியந்தல் |

| | | |
|---|---|---|
| 4. | காய்கறி விதைகள் | • தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர் மற்றும் பெரியகுளம்<br>• வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கிள்ளிகுளம்<br>• மகளிர் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருச்சி<br>• தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், ஊட்டி மற்றும் ஏற்காடு<br>• காய்கறி ஆராய்ச்சி நிலையம், பாலூர் வேளாண் ஆராய்ச்சி நிலையம், விரிஞ்சிபுரம் |
| 5. | பழ மரங்களின் ஒட்டுசெடிகள், நாற்றுகள் மற்றும் அலங்காரச் செடிகள | • வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை<br>• தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர் மற்றும் பெரியகுளம்<br>• மகளிர் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருச்சி<br>• தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், ஏற்காடு, பேச்சிப்பாறை, கொடைக்கானல், தடியன்குடிசை மற்றும் ஊட்டி<br>• மலரியல் ஆராய்ச்சி நிலையம், தோவாளை<br>• வேளாண் ஆராய்ச்சி நிலையம், பவானிசாகர்<br>• காய்கறி ஆராய்ச்சி நிலையம், பாலூர்<br>• திராட்சை ஆராய்ச்சி நிலையம், தேனி<br>• எலுமிச்சை ஆராய்ச்சி நிலையம், சங்கரன் கோவில்<br>• மண்டல ஆராய்ச்சி நிலையம், அருப்புக்கோட்டை மற்றும் திரூர் |
| 6. | தென்னை நாற்றுகள் | • தென்னை நாற்றாங்கால், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்<br>• வேளாண் ஆராய்ச்சி நிலையம், பவானிசாகர்<br>• தென்னை ஆராய்ச்சி நிலையம், ஆழியார் நகர் மற்றும் வேப்பன்குளம் |
| 7. | கரும்பு விதைக் கரணை | • கரும்பு ஆராய்ச்சி நிலையம், சிறுகமணி, கடலூர் மற்றும் மேலாலத்தூர் |
| 8. | தீவனப் பயிர்கள் | • தீவனப் பயிர்கள் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்<br>• வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், வாழவச்சனூர் |

| | | |
|---|---|---|
| 9. | மரக்கன்றுகள் | • வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மேட்டுப்பாளையம்<br>• வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை<br>• வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், குமுளூர் |
| 10. | உயிர் உரங்கள் | • வேளாண் நுண்ணுயிரியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்<br>• அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருச்சி<br>• வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கிள்ளிகுளம், மதுரை மற்றும் ஈச்சங்கோட்டை<br>• தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பெரியகுளம்<br>• தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை<br>• தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், ஏற்காடு மற்றும் ஊட்டி<br>• மண்டல ஆராய்ச்சி நிலையம், பையூர்<br>• வேளாண் ஆராய்ச்சி நிலையம், விரிஞ்சிபுரம் |
| 11. | மண்புழு உரம் | • மத்திய பண்ணை, உழவியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்<br>• வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கிள்ளிகுளம், மதுரை மற்றும் வாழவச்சனூர்<br>• அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருச்சி<br>• வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மேட்டுப்பாளையம்<br>• தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், ஏற்காடு ஊட்டி மற்றும் பேச்சிப்பாறை<br>• மலரியல் ஆராய்ச்சி நிலையம், தோவாளை<br>• மண்டல ஆராய்ச்சி நிலையம், பையூர்<br>• வேளாண் ஆராய்ச்சி நிலையம், பவானிசாகர் மற்றும் திருப்பதிசாரம்<br>• தென்னை ஆராய்ச்சி நிலையம், ஆழியார்நகர்<br>• மண்டல ஆராய்ச்சி நிலையம், அருப்புக்கோட்டை |

| | | |
|---|---|---|
| 12. | உயிரியல் பூச்சிக் கொல்லிகள் (டிரைக்கோடெர்மா, சூடோமோனாஸ், பிரேவிகார்னிஸ்) | • பயிர் வினையியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்<br>• வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கிள்ளிகுளம் மற்றும் மதுரை<br>• அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருச்சி<br>• பயிர் வினையியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்<br>• வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கிள்ளிகுளம் மற்றும் மதுரை<br>• அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருச்சி<br>• தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பெரியகுளம்.<br>• தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், ஏற்காடு, ஊட்டி மற்றும் தடியன்குடிசை<br>• மண்டல ஆராய்ச்சி நிலையம், பையூர், அருப்புக்கோட்டை மற்றும் விருத்தாச்சலம்<br>• பூச்சியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்<br>• நூற்புழுவியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்<br>• சிறுதானியங்கள் மகத்துவ மையம், அத்தியந்தல்<br>• வேளாண் ஆராய்ச்சி நிலையம், பவானிசாகர் மற்றும் விரிஞ்சிபுரம்<br>• தென்னை ஆராய்ச்சி நிலையம், ஆழியார்நகர் மற்றும் வேப்பங்குளம்<br>• மக்காச்சோளம் ஆராய்ச்சி நிலையம், வாகரை<br>• தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை |
| 13. | தென்னை டானிக் மற்றும் பிற வளர்ச்சி ஊக்கிகள் | • பயிர் வினையியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்<br>• வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை<br>• தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பெரியகுளம்<br>• மரவள்ளிக்கிழங்கு மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலையம், ஏத்தாபூர்<br>• தென்னை ஆராய்ச்சி நிலையம், வேப்பங்குளம் |

| | | |
|---|---|---|
| 14. | பஞ்சகவ்வியம் தசகவ்வியம் | • அங்கக வேளாண்மைத் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்<br>• சுற்றுச்சூழல் அறிவியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்<br>• தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், ஊட்டி |
| 15. | மண் மறறும் நீர் பரிசோதனை | • மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்<br>• சுற்றுச்சூழல் அறிவியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்<br>• தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பெரியகுளம்<br>• தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், ஊட்டி<br>• மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்<br>• சுற்றுச்சூழல் அறிவியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்<br>• தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், பெரியகுளம்<br>• தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், ஊட்டி<br>• வேளாண் அறிவியல் நிலையம், பவானிசாகர்<br>• வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கிள்ளிகுளம் மற்றும் மதுரை<br>• அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருச்சி |
| 16. | ஆய்வகப் பணிகள் | • பூச்சி நச்சியியல் துறை, வேளாண் பூச்சியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்<br>• நேனோ அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்<br>• சுற்றுச்சூழல் அறிவியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்<br>• மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்<br>• வேளாண் நுண்ணுயிரியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்<br>• விதையியல் தொழில்நுட்பத் துறை |

| | | |
|---|---|---|
| | | தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்<br>• அறுவடை பின்சார் தொழில்நுட்பத்துறை , தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் , கோயம்புத்தூர்<br>• தொலையுணர்வு மற்றும் புவிசார் தகவல் தொழில்நுட்பத் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் |
| 17. | காளான் வளர்ப்பு பயிற்சி | • பயிர் நோயியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்<br>• தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், ஊட்டி<br>• வேளாண் ஆராய்ச்சி நிலையம், பவானிசாகர்<br>• மண்டல ஆராய்ச்சி நிலையம், அருப்புக்கோட்டை<br>• தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை<br>• கரும்பு ஆராய்ச்சி நிலையம், சிறுகமணி<br>• வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை<br>• அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருச்சி<br>• வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கிள்ளிகுளம் |
| 18. | தேனீ வளர்ப்பு பயிற்சி | • வேளாண் பூச்சியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்<br>• அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருச்சி<br>• வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கிள்ளிகுளம்<br>• தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், பேச்சிப்பாறை |
| 19. | உணவுப் பொருட்கள் பதப்படுத்துதல், மதிப்பூட்டுதல், மசாலா பொடிகள் மற்றும் பழரசங்கள் தயாரித்தல் போன்றவற்றில் பயிற்சி | • அறுவடை பின்சார் தொழில்நுட்பத் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்<br>• தகவல் மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை மனையியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை<br>• மனையியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை |
| 20. | சிறிய வேளாண் இயந்திரங்கள் | • வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், குமுளூர் |

மேற்காணும் இடுபொருள் மற்றும் பயிற்சிகளுக்கான தேவைகளை விவசாயிகள் அந்தந்த நிலையங்களுக்கு தொடர்பு கொண்டும் பெறலாம். ❀

# வேளாண் பொருட்கள் ஏற்றுமதியாளர்களுக்கான பயிற்சி மற்றும் வழிகாட்டல்

**முனைவர் இரா. பாலாஜி, முனைவர் சே.தே. சிவகுமார்**
வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் – 641 003
அலைபேசி : 86102 19896

இந்தியா, உற்பத்தி செய்யும் பெரும் பகுதியான வேளாண் விளைப் பொருட்களை உள்நாட்டுத் தேவைகளுக்கே பயன்படுத்திக் கொண்டாலும், ஓர் குறிப்பிடத்தக்க அளவு ஏற்றுமதியும் செய்கிறது. உலக வர்த்தக அமைப்பின் புள்ளி விவரங்களின்படி உலகளவில் வேளாண் விளைப்பொருட்களை ஏற்றுமதி செய்யும் நாடுகளில் இந்தியா 7 ம் இடத்தில் உள்ளது. இந்தியாவிலிருந்து 2018 - 19 ம் நிதியாண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களின் மொத்த மதிப்பு 38.49 பில்லியன் அமெரிக்க டாலர் ஆகும். இதில் மொத்த பழங்களின் ஏற்றுமதி மதிப்பு சுமார் 6920 இலட்சம் அமெரிக்க டாலர் ஆகும். மொத்த காய்கறிகளின் ஏற்றுமதி மதிப்பு 7772 இலட்சம் அமெரிக்க டாலர் ஆகும். இந்தியாவிலிருந்து பழங்கள் மற்றும் காய்கறிகள் முக்கியமாக பங்களாதேஷ், ஐக்கிய அரபு நாடுகள், நெதர்லாந்து, நேபாளம், இலங்கை, ஓமன் மற்றும் கத்தார் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. 2018 - 19 ம் நிதியாண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட, பதப்படுத்தப்பட்ட உணவு வகைகளின் மதிப்பு சுமார் 31111.90 கோடி ரூபாய் ஆகும். நம் நாட்டிலிருந்து மாம்பழம், அக்ரூட், திராட்சை, வாழைப்பழம், காய்கறிகளில் வெங்காயம், வெண்டை, பச்சைமிளகாய், உருளைகிழங்கு ஆகியவை அதிகளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இயற்கை வேளாண் பொருட்களுக்கு ஏற்றுமதி சந்தையில் அதிக வரவேற்பு உள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் இயற்கை வேளாண் பொருட்களின் ஏற்றுமதி 500 கோடியிலிருந்து 2500 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. இதில் சோயா, பருத்தி ஆகியவற்றின் பங்கு 50 சதவிகிதமும், மசாலா பொருட்கள், தேயிலை, பருப்பு, கம்பு போன்றவை எஞ்சிய பங்கையும் கொண்டுள்ளன.

தமிழ்நாடு, வாழைப்பழ உற்பத்தியில் இரண்டாம் இடத்தை வகிக்கின்றது. தற்போது சர்வதேச ஏற்றுமதி சந்தையில் ரொபஸ்டா வகை வாழைப்பழங்கள் அதிகம் விரும்பப்படுகின்றன. திராட்சை, கோவை மற்றும் மதுரை மாவட்டங்களில் அதிகளவு சாகுபடி செய்யப்படுகிறது. திராட்சை ஏற்றுமதிக்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. அதேபோல்

சீமைவெள்ளரி, மிளகாய் ஆகியவை தமிழ்நாட்டிலிருந்து பெரும்பாலும் பங்களாதேஷ், சிங்கப்பூர், மலேசியா, இத்தாலி, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தமிழ்நாட்டிலிருந்து வேளாண் பொருட்களை பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது மிகவும் இலாபகரமானது. ஏற்றுமதியின் முக்கியத்துவத்தை உணர்ந்து தொழில் முனைவோர்களுக்கு விளைப்பொருட்கள் ஏற்றுமதி தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.



## வேளாண் ஏற்றுமதி வழிகாட்டுதல்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஏற்றுமதி சார்ந்த பயிற்சி வகுப்புகளை விவசாயிகள், தொழில்முனைவோர் மற்றும் இளைஞர்களுக்கு வழங்கி வருகின்றது. இப்பயிற்சி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண் வணிக மேம்பாட்டு இயக்குநரகம் (ABD) மூலமாக வழங்கப்படுகின்றன. இதுவரை ஆறு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 91 நபர்கள் பயன் அடைந்து உள்ளனர். அவர்களில் 75 பேர் ஆண்கள் (82 சதவிகிதம்) மற்றும் 16 பேர் பெண்கள் (18 சதவிகிதம்) ஆவர். மேலும், அவர்களில் 55 சதவிகிதம் 25 - 40 வயது உடையவர்கள், 40 சதவிகிதம் 40 - 50 வயது உடையவர்கள் மற்றும் 5 சதவிகிதம் 50 வயதிற்கும் மேற்பட்டவர்கள். மேலும், அவர்களில் 69 பேர் (75 சதவிகிதம்) தொழில்முனைவோர், ஆசிரியர்கள், ஓய்வு பெற்ற அதிகாரிகள், விவசாயிகள் மற்றும் 15 பேர் (16 சதவிகிதம்) மென் பொறியாளர்கள், தனியார் நிறுவனங்களில் பணிபுரிவோர் ஆவர். ஏழு பேர் (8 சதவிகிதம்) இறுதி ஆண்டு மாணவர்கள் ஆவர்.

## வேளாண் ஏற்றுமதி இறக்குமதி பயிற்சியின் முக்கிய அம்சங்கள்

- அனுபவம் வாய்ந்த ஏற்றுமதி வல்லுனர்கள் மூலம் பயிற்சி வழங்கப்படுகிறது.
- பயிற்சியில் ஏற்றுமதி சம்மந்தமான அனைத்து தகவல்களும், எளிமையாக அனைவருக்கும் புரியும் வகையில் அளிக்கப்படுகிறது.
- ஒரு பயிற்சிக்கு 20 நபர்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டு தனி கவனத்துடன் 5 நாள் பயிற்சி அளிக்கப்படுகின்றது.
- இப்பயிற்சியில் விவசாயிகள், தொழில்முனைவோர் மற்றும் ஏற்றுமதியில் ஆர்வம் உடையோர் மற்றும் இளைஞர்கள் கலந்துக் கொண்டு பயன் அடையலாம்.

- இப்பயிற்சியில் வேளாண் ஏற்றுமதியாளர்கள் தங்கள் அனுபவங்களை பங்கேற்பாளர்களுடன் பகிர்வர்.
- மேலும், இப்பயிற்சியில் வேளாண் ஏற்றுமதி நிறுவனங்கள், விமானச்சரக்கு கையளுதல், முனையத்தள செயல்பாடு (Air cargo) போன்ற ஏற்றுமதி சார்ந்த நிறுவனங்களுக்கு நேரடியாக அழைத்து சென்று களப்பயிற்சி அளிக்கப்படுகிறது.
- ஏற்றுமதி கடன் உத்தரவாத கழகம் (Export Credit Guarantee Corporation -ECGC), இந்திய ஏற்றுமதி அமைப்புகளின் கூட்டமைப்பு (Federation of India Export Organisation - FIEO), வங்கிகள் போன்ற ஏற்றுமதி சார்ந்த நிறுவனங்கள் நேரடியாக தங்களின் ஏற்றுமதி சேவைகளை பற்றி விளக்கம் அளிக்கின்றனர்.
- வேளாண் பொருட்களின் ஏற்றுமதி தேவைக்கேற்ற உழவர்கள் மற்றும் உழவர்உற்பத்திநிறுவனங்களுடன் வேளாண் தொழில்முனைவோர் ஒருங்கிணைக்கப்படுகிறார்கள்.
- இப்பயிற்சியில் கலந்து கொண்டவர்களுக்கு ஒவ்வொரு மாதமும் விடுமுறை தினத்தன்று ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல் வழங்கப்படுகின்றது.

வேளாண் பொருட்கள் ஏற்றுமதி வரைபடம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வரைப்படத்தில் உள்ள அனைத்து தலைப்புகளிலும் பயிற்சி வழங்கப்படுகிறது.

## வேளாண் வணிக ஏற்றுமதி கூட்டமைப்பு

வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககத்தில் நடைபெற்ற பயிற்சியில் (ஏற்றுமதி) கலந்துகொண்ட பங்கேற்பாளர்களுக்கு வேளாண் வணிக ஏற்றுமதி கூட்டமைப்பு (Agri Business Export Consortium - ABEC) தொடங்கப்பட்டுள்ளது. இக்கூட்டமைப்பில் ஏற்றுமதிக்கு தேவையான அனைத்து சேவைகளும் ஒருங்கிணைக்கப்பட்டு வழங்கப்படுகின்றது. இக்கூட்டமைப்பில் ஆலோசனைகள், வழிமுறைகள், வாய்ப்புகள் பற்றி அறிந்து கொள்ள வல்லுனர்களுடன் இணைப்பு ஏற்படுத்தப்படும். மேலும், அவர்களுடன் கலந்துரையாட வாய்ப்பு கிடைப்பதால் அவர்களின் அனுபவம் மற்றும் உதவிகளையும் பெற வாய்ப்புகள் கிடைக்கின்றன. இந்தக் கூட்டமைபின் மூலம் கீழ்க்காணும் சேவைகள் வழங்கப்படும்.

- ஏற்றுமதி பொருட்கள் தேர்வு செய்தல் மற்றும் ஏற்றுமதி சந்தை வழிகாட்டுதல்
- தளவாடங்கள் சேவை
- சந்தை விவரம் மற்றும் சந்தை வாய்ப்புகளை உருவாக்குதல்
- வங்கி சேவைகள் வழங்குதல்
- இணையவழி சிறப்பு பயிற்கள் மற்றும் ஆலோசனைகள் வழங்குதல்
- உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களை இணைத்தல்
- வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககத்தில் உள்ள வசதிகளை பயன்படுத்திக் கொள்ளுதல்

## வேளாண் பொருட்கள் ஏற்றுமதிக்கான படிநிலைகள்

ஏற்றுமதி செய்வதற்கான நாடு மற்றும் பொருட்கள் தேர்வு
( Selecting country and Product for export )

சட்டதிட்டங்களை பின்பற்றுவது (Compliance with legal frame work)

ஏற்றுமதி ஒப்பந்தத்தை முடித்தல் (Concluding export deal)

ஏற்றுமதி நிதி ஏற்பாடு
(Arranging Export Finance)

பொருட்களை உற்பத்தி செய்தல்
(Manufacturing of goods)

C மற்றும் F முகவரை நியமித்தல்
(Appointing C & F agent)

சரக்கு காப்பீட்டை ஏற்பாடு செய்தல்
(Arranging Cargo Insurance)

கப்பலில் இடம் பதிவு செய்தல்
(Booking Shipping Space)

C மற்றும் F முகவருக்கு ஆவணங்களை அனுப்புதல்
(Sending Documents to C & F agent)

C மற்றும் F முகவருக்கு பொருட்களை அனுப்புதல்
(Despatch of Goods to C & F agent (at the port))

C மற்றும் F முகவரிடமிருந்து ஆவணங்கள் மற்றும் சரக்கு ரசீது வாங்குதல்
(Receipt of Document and Cargo by C & F agent)

C மற்றும் F முகவரால் சுங்க அனுமதி பெற்று சரக்கை ஏற்றுதல் (Custom clearance)

C மற்றும் F முகவரிடமிருந்து ஏற்றுமதியாளர்களுக்கு ஆவணங்களை அனுப்புதல்
(Sending Documents to the exporter by C & F agent)

இறக்குமதியாளருக்கு வர்த்தக பரிவர்த்தனை படிவம் அனுப்புதல்
(Sending Shipping Advice to the Importer)

ஏற்றுமதி சலுகைக்கு உரிமைகோரல்
(Claiming Shipping Incentives)

வங்கிக்கு ஆவணங்களை அனுப்புதல்
(Presentation of Documents to Negotiative Bank)

ஏற்றுமதி சலுகைகளை பெருதல்
(Receiving Export Incentives)

ஏற்றுமதியாளர் கட்டணம் பெறுதல்
(Exporter Receiving Payment)

வணக்கம்,

திருமதி. சித்ரா பரணி ஆகிய நான் ஸ்ரீ பிரத்துங்கிரா ஏற்றுமதி மற்றும் இறக்குமதி என்ற நிறுவனத்தை 2019 ம் ஆண்டு ஜுலை மாதம் தொடங்கினேன். ஏற்றுமதி மற்றும் இறக்குமதியில் என் பயணத்தை தொடங்குவதற்கு முன் அதை பற்றிய பயிற்சி தேவைப்பட்டது. அதற்காக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககத்தை நாடினேன். முனைவர் இரா. பாலாஜி அவர்களின் உதவியுடன் ஏற்றுமதி மற்றும் இறக்குமதில் பயிற்சி பெற்று தற்பொழுது ஓமன் மற்றும் மஸ்கட் ஆகிய நாடுகளுக்கு சிறுதானியங்கள், பூக்கள் மற்றும் காய்கறிகளை ஏற்றுமதி செய்து வருகிறேன். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககதில் அளிக்கப்பட்ட பயிற்சி எனக்கு பேருதவியாக இருந்தது. இத்தருணத்தில் வேளாண் வணிக ஏற்றுமதி கூட்டமைப்பிற்கு எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.



Proprietor : திருமதி. சித்ரா பரணி
அலைபேசி : 9629014210

அனைவருக்கும் வணக்கம்!

திருப்பூர் மாவட்டத்தில் வசிகின்ற திரு. மோகன் ராஜ் மற்றும் திரு. வெங்கடேஷ் ஆகிய நாங்கள் சிறிய அளவில் காய்கறி வணிகம் செய்து வருகின்றோம். எங்கள் தொழிலை மேம்படுத்துவதற்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககத்தை அணுகினோம். அங்கு அளிக்கப்பட்ட பயிற்சி மற்றும் வழிகாட்டுதலின் பேரில் எங்களின் பயணம் தொடங்கியது. இதுவரை வெற்றிகரமாக 8 டன் மாம்பழம் மற்றும் காய்கறிகளை ஏற்றுமதி செய்துள்ளோம். இதற்காக எங்களை வழி நடத்திய மதிப்பிற்குரிய இயக்குநர் முனைவர் சே. தே. சிவகுமார், முனைவர். இரா. பாலாஜி மற்றும் திரு. மூசா அவர்களுக்கு எங்களது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.





இங்ஙனம்,
மோகன்ராஜ் மற்றும் வெங்கடேஷ்
அலைபேசி : 8667782071


தொடர்புக்கு

வேளாண் வணிக ஏற்றுமதி கூட்டமைப்பு (Agri Business Export Consortium - ABEC)
வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003. அலைபேசி : 8610219896
மின்னஞ்சல் : eximabdtnau@gmail.com

# வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககத்தின் செயல்பாடுகள்




சிந்தனைத் தொடர் போட்டியில் வெற்றியாளர் ஊக்குவிப்பு



புரிந்துணர்வு ஒப்பந்தம் – லேசர் மூலம் சேற்றுழவுடன் சமன் செய்யும் இயந்திரத்தின் பகுதி உரிமம் வழங்குதல்



தொழில்முனைவோர்க்கான ஏற்றுமதி பயிற்சி



வயல்விழா – விதை உற்பத்தியாளர்கள் இரகங்களை பார்வையிடல்



தென்னை விவசாயிகளுக்கான தொழில்முனைவோர் பயிற்சி

# உழவரின் வளரும் வேளாண்மை

## விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன

### விளம்பரக் கட்டணம்

| வ.எண் | விவரம் | ஒரு ஆண்டு ( ரூ. ) | தனி இதழ் ( ரூ. ) |
|---|---|---|---|
| 1. | மேல் அட்டைப் பின்புறம் (பல வண்ணம்) | ரூ. 1,20,000/- | ரூ. 10,000/- |
| 2. | மேல் அட்டை உட்புறம் - 2வது, 3வது பக்கம் (பல வண்ணம்) | ரூ. 84,000/- | ரூ. 7,000/- |
| 3. | இதழ் உட்புறம் -முழுப்பக்கம் (பல வண்ணம்) | ரூ. 60,000/- | ரூ. 5,000/- |
| 4. | இதழ் உட்புறம் -அரைப்பக்கம் (பல வண்ணம்) | ரூ. 30,000/- | ரூ. 2,500/- |

**விளம்பரம் அளிக்க விரும்புவோர்**
**விளம்பரக் கட்டணத்தை**

**"The Editor, Uzhavarin Valarum Velanmai"**

**என்ற பெயரில் வங்கி வரைவோலையையும்**
**விளம்பரச் செய்தியையும்**

**ஆசிரியர்**
உழவரின் வளரும் வேளாண்மை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

**என்ற முகவரிக்கு அனுப்பவும்.**

**தொடர்ந்து 3 அல்லது அதற்கு மேற்பட்ட இதழ்களில் விளம்பரம் வெளியிட விளம்பரக் கட்டணத்தில்**

**10% சலுகை உண்டு**

**மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய**
**தொலைபேசி எண் : 0422-6611351**

Regd No. DRO / CBE/ Ref.No./ 4980 / 2009 / E2 / 2010
Reg. No. : TNTAM / 2009 / 35943
Postal Regn.No. CB / 063 / 2018 - 2020
Date of Publication : 15.4.2020




Published by **Dr. M. Jawaharlal** on behalf of **Tamil Nadu Agricultural University** and published from **Directorate of Extension Education, Tamil Nadu Agricultural University, Coimbatore-3** and printed by **G.Packia Selvan at M/s.Bhagya Offset Printers,** 1/3, Chinnamal Street, Saibabacolony, Coimbatore - 641 038

**Editor : Dr. M. Jawaharlal**